ered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 26—No. 2

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 26 | நந்தன மாசி 1953 பிப்பிரவரி | இதழ் 2

உள்ளுறை — பக்கம்


| | | |
|---|---|---|
| காட்டு ஒலி | ... | 49 |
| திருக்கழுக்குன்றம் | ... | 54 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | ... | 56 |
| நீத்தாய கயம் | ... | 61 |
| துகளறு போதம் | ... | 68 |
| ஆவின் பெருமை | ... | 74 |
| உணவுக் கொள்கை | ... | 77 |
| நாவலர் நினைவுவிழாத் தலைமையுரை | ... | 82 |
| ...சம் | ... | 90 |


ம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
ர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
வ சித்தாந்த மகா சமாஜம்
53, ...தரு (ஜோன்ஸ் ரோடு), சைதாப்பேட்டை, சென்னை-1

JC
KE73m211,N78
N53·26·2
186887

## சமாஜ அறிக்கைகள்

### சைவப்புலவர் தேர்வு—1952

| நுழைவெண் | தேர்ச்சி பெற்றவர் விவரம் | வகுப்பு |
|---|---|---|
| 1 | வீ. வ. நல்லதம்பி<br>இளங்கோ அகம், புங்குடுதீவு | மூன்று |
| 6 | ச. சச்சிதானந்தம்<br>ஏழாலைமேற்கு, சுன்னகம் | மூன்று |

---

நமது சமாஜ 47-வது ஆண்டு நிறைவு விழா 1953-ஆம் ஆண்டு, எப்ரல் திங்கள் முதல் கிழமை (வாரம்) யில் சுழிபுரத்தில் நடைபெறும்.

---

## திருவள்ளுவர் திருநாள்

(பண்டிதர். கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல்.)

அவருடைய திருநாளை, மாசி உத்தரம் என்று ஒரு சாராரும், வைகாசி அனுடம் என்று மற்றொருசாராருங் கருதுகின்றனர். இதனாலே சில இடங்களில் மாசி மாதத்திலும் வேறு சில இடங்களில் வைகாசி மாதத்திலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடி வருகின்றனர். இந்த இரு நாட்களில் ஒன்றினைக் கொண்டாடுதலே நல்லது என முடிவுசெய்து, இதுபற்றிய கருத்தினை அறிவிக்குமாறு தமிழ் அறிஞர்கள் சிலருக்கும், தமிழ்ச் சங்கங்கள் சிலவற்றுக்கும் எழுதியிருந்தோம். பெரும்பாலானோர் வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுதல் நன்று என அறிவித்துள்ளார். ஆகவே, இனி வைகாசி அனுடத்தையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுமாறு தமிழ்மக்கள் யாவரையுங் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாண்டில் திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் கரு-ஆம் நாளாகிய (28—5—53) வியாழக்கிழமையாகும்.

இந்தநாளைத் தமிழ்மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடச் செய்வதற்கும், ஆண்டு தோறும் வரும் திருவள்ளுவர் திருநாளை அரசினர் விடுமுறை நாளாக்குவதற்கும் எங்கள் தமிழ் மறைக்கழகம் முயல்கிறது. இம் முயற்சி நன்கு நிறைவேறுவதாக.

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

| மலர் 26 | நந்தன மாசி 1953 பிப்ரவரி | இதழ் 2 |
|---|---|---|

## நாட்டு ஒலி

1. கோடிய காலம் :—சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பல கொடுமைகள் நேர்ந்து வருகின்றன. இவைகள் மனிதர்களால் மட்டுமன்றி இயற்கையாலும் நேருகின்றன. பண்டைய நூல்களின்படி நமது நாட்டில் திங்கள் மும்மாரி பெய்யவேண்டும். ஆனால் அவ்வாறு பெய்து வருவதாகத் தெரியவில்லை. பருவ மழைகளாவது முறையாகப் பெய்வதானால் நாட்டில் வேளாண்மை செழிப்பாக உண்டாகும். ஆடி, ஆவணித் திங்களில் ஒரு முறையும், ஐப்பசி கார்த்திகைத் திங்கள்களில் மறுமுறையும் மழைபொழிவது இயல்பு. ஆனால் சென்ற சில ஆண்டுகளாக இம்முறை தவறிவிட்டது. அதனால் நாட்டில் விளைவு குறைந்து மக்களுக்கு உணவு அரிதாகிவிட்டது. எங்கும் பஞ்சம் என்ற பேச்சே வலுத்துவிட்டது.

மழைக்கொடுமை இரண்டுவிதங்களாகத் தோன்றியிருக்கின்றது. ஒன்று மழைப் பெருக்கம், மற்றொன்று மழையின்மை. கிழக்கே கடற்கரையோரத்தில் மழைப்பெருக்கம் ஏற்பட்டுவிட்டது. கடும்புயலினால் கணக்கற்ற கெடுதிகள் நேர்ந்தன. வீடுகள் அழிந்தன. மரங்கள் விழுந்தன. பயிர்கள் கெட்டன. சிறப்பாகப் பலன் தரும் மரங்களாகிய வாழை, மா, புளி முதலியவைகள் கணக்கில்லாமல் விழுந்தன.

ஆகவே மழைவந்தும் பயனற்றுப் போய் வறுமை தொடங்கியது. நடுநாடுகளாகிய கொங்கு, பாண்டிய நாடுகளில் மழையின்மை ஏற்பட்டு விளைவு முழுவதும் அற்றுப்போய், கால் நடைகளுக்குத் தீனியும், மக்களுக்குக் குடி நீரும் இல்லாமல் போய் விட்டது. வறுமை மிகுதியால் ஏழைகளுக்காகக் கஞ்சித் தொட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு கேடுகள் விளைவதற்கு யார் காரணமோ ?

நாட்டில் வளம்குன்றி வறுமை ஏற்படுவதற்கு மக்களின் ஒழுங்கீனம்தான் காரணம் என்று முதியோர்கள் கூறுவார்கள். என்றாலும் நாட்டில் ஒருவராவது நல்லவர்களாக இருந்தால் அவர் பொருட்டாவது மழைபெய்யும் என்ற ஔவையார் வாக்கும் பொய்த்துவிட்டதா ? மேற்கு நாடுகளில் மழைபெய்யாமற் போனால் மழைபெய்விப்பதற்காக விஞ்ஞானக் கலையைப் பயன்படுத்திக் கொள்வார்கள். நமது நாட்டிலும் அவ்வாறு செய்யலாகாதா என்று கேள்வி கேட்கப்படுகிறது. ஆனால் அரசியலார் கூடியமட்டும் உதவி செய்ய எண்ணுகிறார்கள். மழைபெய்யாத நாடுகளுக்கு மழைபெய்த நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டு செலுத்துகிறார்கள். இவ்வாறு எத்தனை நாள் உதவி புரியக்கூடும்.

மேலும் அண்மையிலே வானிலை கலைப்பகுதியார்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். சென்ற ஒரு நூற்றாண்டாகப் பெய்த மழைக் குறிப்புகளைத் தொகுத்து அதில் காணும் முறைகளைக் கண்டு தங்கள் கருத்துக்களை வற்புறுத்தியிருக்கிறார்கள். மழைக் கணக்குப் புள்ளிகளைப் பாகுபடுத்திப் பார்த்தால், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மழை தவறிவந்திருக்கிறதென்று அக்குறிப்பு காட்டுகின்றது. ஆகவே, இப்பொழுது மழைதவறிப் போனால் அடுத்தாற்போல மழைபெய்வது நிச்சயம் என்று அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். மக்கள் இப்பொழுது சிறிது வருந்தினாலும் பின்னாலே நன்மை கிடைக்கலாமல்லவா ?

இ[illegible] கெடுவுக்கு ஒரு முறை மழை தவ[illegible]வது இக்காலத்தில் மட்டுமல்ல, பண்டைக்

186887.



காலத்திலும் இருந்தது என்று கூறலாம். சங்க நூல்களில் மழைதவறிப்போன செய்திகள் கூறப்பட்டுள்ளன. வடநாட்டிலிருந்து சமணர்கள் தெற்கே குடியேறினதற்கும் வற்கடங்களே காரணம் என்று அறிகின்றோம். சம்பந்தர் காலத்திலும் அவர் திருவீழிமிழலையில் இருந்தபோது பஞ்சம் ஏற்பட்டது. இறைவனிடம் காசுபெற்று அடியார்களுக்கு உணவு அளித்தார் என்று பெரிய புராணம் கூறுகிறது. ஆகவே, பஞ்சங்கள் தோன்றுவது இயற்கையல்லவா ?

மழை தவறிப் போவதும் அதனால் பஞ்சம் ஏற்படுவதும் இயற்கை எனினும் மக்கள் அதனால் ஏற்படும் துன்பத்தைப் போக்கடிப்பதற்காக அறிஞர்கள் முயற்சி எடுத்திருக்கின்றார்கள். தற்காலத்தில் அம்முயற்சி விஞ்ஞானக் கலையினால் எடுத்தாளப்படுகின்றது. ஆற்றிற்கு அணைகள், நீர்த்தேக்கங்கள், நீர்வீழ்ச்சியினால் மின்சார வசதிகள், மேகங்களை நீர்பொழியச் செய்தல், விளைவில்லா ஊர்களுக்கு விளைவுள்ள ஊர்களிலிருந்து ஏற்றுமதி செய்தல் முதலான கலை இயக்கங்களினால் மக்களுடைய துன்பங்களைப் போக்கடிக்கின்றார்கள். இவைகள் எல்லாம் செய்தும் மழை பெய்வதனால் உண்டாகக் கூடிய சுலபமான நன்மை கிடைப்பதரிது. மற்றும் சில அறிஞர்கள் தெய்வீக வழிபாட்டினால் மழையைத் தருவிக்க முடியும் என நினைக்கிறார்கள். இறைபணியில் மிகுந்த நம்பிக்கை உடையவர்கள் இதனைக் கடைப்பிடிக்க எண்ணுகிறார்கள். நமது நாட்டு முதல் அமைச்சர் இந்த முறையே சிறந்ததென்று அடிக்கடி பேசியிருக்கின்றார்கள். தற்காலத்து இளைஞர்களுக்கு அம்முறையில் நம்பிக்கை பிறப்பது கடினம். வேள்விகள் செய்ய அதனால் புகைகள் கிளம்பி வானத்தில் கருமை கட்டி அதிலிருந்து மழைபெய்கிறதென்று எவராவது நம்புவார்களா ? என்று இளைஞர்கள் கேட்பார்கள். அப்படியிருந்தும் எத்தனையோ சாஸ்திரிகள் வழிபாட்டினால்தான் மழைபெய்கிறதென்று இக்காலத்திலும் கூறுகிறார்கள்.

**கோயில் வழிபாடு குறைந்தால் நிலத்தில் மழை குன்றும் என்று திருமூலர் கூறியிருக்கின்றார்.**

> **முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்**
> **மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்**

என்ற திருமந்திரச் செய்யுட் பகுதியை ஆராய்க.

**2. ஆனாலும் நல்லகாலம் வருகிறது:**—இயற்கையில் இன்பமோ துன்பமோ நீடித்து இருக்காது. அவைகள் மாறிமாறித்தான் வரும். சிலகாலம் துன்பப்பட்ட பிறகு அது தொடர்ந்தே இருக்காமல் இன்பம் வருவது இயல்பு. இரண்டுமூன்று ஆண்டுகளாக நமது நாட்டில் வறுமை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அதற்கேற்ற படி மழையும் குறைந்தது. இந்த வறுமையை இனிமேல் மக்கள் சகிக்கமுடியாது. ஆகவே, இன்பகாலம் இனி விரைவில் வந்துவிடும். அதற்கு இப்பொழுதே அறிகுறிகள் தோன்றுகின்றன.

சில ஆண்டுகளாக நமது அறநிலையங்களில் பூசை முதலியவைகள் தட்டுப்பட்டுப் போயின. மக்கள் அடிக்கடி சமயக் கூட்டங்களில் இதனை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தார்கள். தற்போது சமய நிலையங்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஆர்வமுள்ள அமைச்சர் அதிகாரத்திற்கு வந்திருக்கின்றார். இனி முட்டுப்பாடுகள் குறையும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு முட்டுப்பாடுகள் குறைந்தால் நாட்டில் நன்மை ஏற்படுமல்லவா?

அறநெறி நிலைய அமைச்சர் சென்றவாரத்தில் கோவை வட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். பலகோயில் நிர்வாகங்களையும் நேரில் பார்த்துவிட்டுச் சில தீர்மானங்களுக்கு வந்திருக்கின்றார். அறநிலையங்கள் சீர்திருத்தமடைந்தால் தற்போதுள்ள கேடுகளெல்லாம் நீங்கிவிடுமென்று நம்பிக்கை கொண்டார்.

கோவை வட்டத்தில் திருமால் ஆலயங்களைக் காட்டிலும் சிவாலயங்களே நன்றாக வைக்கப்பட்டிருக்கின்றன



என்று கூறினார். கொங்கு நாட்டில் திருமால் ஆலயங்கள் மிகக்குறைவு. காரைமடையும், மொண்டிப்பாளையமுமே பெரிய ஆலயங்கள். அப்படியிருந்தும் இவைகள் செவ்வையாக வைக்கப்படவில்லை. பேரூரிலும் அவிநாசியிலும் கொடுமுடியிலும் ஆலயங்கள் வைக்கப்பட்டிருக்கும் சீரும் சிறப்பும் காரைமடையிலும் மொண்டிபாளையத்திலும் இல்லை. கொங்குநாட்டுச் செல்வர்கள் வைணவர்களாயிருந்தும் ஏன் இக்கோயில் திருப்பணிகளில் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லையென்று அமைச்சர் கேட்டார். வைணவ ஆலயங்கள் திவ்விய தேசங்களாக அமையவில்லை என்பதையும் அவைகள் சமீப காலத்தவை என்பதையும் தகுந்த காரணம் என்று அன்னார் ஒத்துக் கொள்ளவில்லை. வைணவச்செல்வர்கள் இனிமேலாவது சிரத்தை எடுத்துக்கொண்டு சிவாலயங்களைப் போலவே வைணவ ஆலயங்களையும் வைக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். இந்த எண்ணம் அமைச்சருக்குத் தோன்றியது நல்லகாலம் அல்லவா?

மேலும் மற்றொரு அரிய கருத்தை அமைச்சர் வெளியிட்டார்கள். கொங்கு நாட்டில் நல்ல வருவாய் வாக்கூடிய ஆலயங்கள் பல இருந்தும் தேவாரம், பிரபந்தம், கற்பிக்கக் கூடிய பாடசாலைகள் இல்லையே என்று வருந்தினார். சில ஆண்டுகளுக்கு முன் சில பாடசாலைகள் ஏற்பட்டும் அவைகள் நீடித்து நடைபெறவில்லை என்று கூறப்பட்டது. கோவையில் தமிழ்ச் சங்கத்தை ஒட்டி ஒரு பாடசாலையும், கோணியம்மன் கோயிலை ஒட்டி மற்றொரு பாடசாலையும், சத்திய மங்கலத்தில் ஒரு பாடசாலையும் ஏற்பட்டிருந்தன. இப்பாடசாலைகள் முதலில் நன்றாக நடந்த போதிலும் நாளா வட்டத்தில் பிள்ளைகள் வரவு நின்றுபோய் இறுதியில் அவைகள் மூடவேண்டி வந்தன. ஆசிரியர்களுக்கும் தகுந்த ஊதியம் கிடைக்கவில்லை. அந்த வகையிலும் பாடசாலைகள் நீடிக்கவில்லை. இந்தக் காரணங்களைக் கூறின பிறகு மீண்டும் ஊக்கத்தோடு வேலை செய்தால் பாடசாலைகள் நீடித்து நிற்குமென்று அமைச்சர் கூறினார்.

இனி, கோணியம்மன்கோயிலில் அமைச்சர் தரிசனம் செய்த பிறகு அங்கே வேதபாராயணம் செய்த வேதியர்களை நோக்கி இந்த வட்டத்தில் வேத பாடசாலை இருக்கின்றதா? நீங்கள் எங்கே வாசித்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் இவ்வட்டத்திலேயே வேதபாடசாலை இல்லையென்றும், படித்தவரிடம் படியாதவன் கேள்வி முறையில் பாராயணம் செய்து வந்தானென்றும் கூறினார்கள். கணக்கற்ற கோயில்கள் கொண்ட கொங்கு நாட்டில் வேதபாடசாலை ஒன்றாவது இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டார். அமைச்சருடைய சமய முன்னேற்ற உணர்ச்சியைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். இவ்வாறு முன்னேற்றக் கொள்கைகள் அமைச்சரிடம் காண்பது நல்ல காலத்திற்கு அறிகுறியல்லவா?

## 2. தலப்பகுதி

# திருக்கழுக்குன்றம்

1. ஊர்: இந்த ஸ்தலம் செங்கற்பட்டு வட்டத்தில், செங்கற்பட்டு நிலையத்திலிருந்து கிழக்கே மகாபலிபுரம் போகும் சற்சாலையில் 9-வது கல்லில் இருக்கின்றது. இது ஒரு தனிக்குன்றாகவும், அதனடியில் மேற்புறம் ஊர் ஆகவும் அமைந்துள்ளது. மலையைச் சுற்றிலும் கிரிசுற்றும் பாதை இருக்கின்றது. நோய் உற்றவர்கள் இவ்வூரில் வாசம் செய்துகொண்டு கிரியைச் சுற்றி இறைவனை வழிபடுவார்கள். அவ்வாறு செய்வதனால் நோய் நீங்கப்பெறுவார்கள்.

2. ஆலயம்: இவ்வூர் மலை ஒரே பெரும்பாறையாக தோற்றமளிக்கின்றது. மலை ஏறுவது சிறிது கடினம். படிகள் உண்டு. ஆலயம் உச்சியில் கட்டப்பட்டிருக்கிறது. உள்ளே இருட்டு அதிகம். இத்தலம் நால்வர்களாலும் பாடப்பெற்ற தனிப் பெருமையைக் கொண்டது. எப்போதும் யாத்திரிகள் வந்துகொண்டேயிருப்பார்கள்.



சுவாமியின் பெயர் வேதகிரியீசுவரர்; அம்மையின் பெயர் பெண்ணின் நல்லாள் அம்மை.

3. ஐதீகங்கள்: இம்மலையில் கழுகுகள் பூசிக்க வருதலால் இது "திருக்கழுக்குன்றம்" எனப் பெயர் பெற்றது. என்றைக்கும் இரண்டு கழுகுகள் பகல் 12 மணிக்கு வந்து பண்டாரத்தின் கையிலிருந்து பிரசாதத்தை அருந்திவிட்டுப் போகும். அதைக் காண்பதற்கு யாத்திரிகள் ஏராளமாக வருவார்கள். இந்தக் காரணத்திற்காக வட நாட்டார்கள் இதனைப் பட்சி தீர்த்தம் என்பார்கள்.

மேலும் வேதங்கள் மலை உரு எடுத்துக்கொண்டு சுவாமியைத் தாங்கிக்கொண்டிருப்பதால் இந்த மலை வேதகிரி அல்லது மறைமலை என்று பெயர்பெறும்.

4. மற்ற ஆலயங்கள்: மலைக்கு மேற் புறத்தில் ஊரின் இடையில் ருத்திரகோடி என்று மற்றொரு தலம் இருக்கின்றது. இந்தத் தலம் ஒரு வைப்புத் தலமாக விளங்குகிறது. ஊரின் வடபுறத்தில் மற்றொரு பெரிய கோயில் இருக்கின்றது. அது கருங்கல்லால் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. சுவாமியின் பெயர் பக்தவத்சலர்; அம்மையின் பெயர் திரிபுரசுந்தரி; இவ்வாலயத்தைச் சுற்றியுள்ள ஊரின்பெயர் வேதபுரி என்பது.

5. தீர்த்தம்: மலையை யடுத்துத் தென்புறமாக உள்ள பெரிய தடாகம் சங்க தீர்த்தம் என்றபேர் பெற்றிருக்கின்றது. இத்தீர்த்தத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வலம்புரிசங்கு ஒன்று பிறக்குமாம்.

6. பாடல்கள்: சம்பந்த சுவாமிகள் "தோடுடையானொரு காதிற்றூய குழைதாழ" என்ற பதிகமும், அப்பர் சுவாமிகள் "மூவிலைவேற் கையானை மூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானை முதலானானை" என்ற பதிகமும், சுந்தரமூர்த்திகள் "கொன்று செய்த கொடுமையாற் பல சொல்லவே" என்ற பதிகமும், மாணிக்கவாசகர் "பிணக்கிலாத பெருந்துறை பெருமான் உன் நாமங்கள் பேசுவார்" என்ற பதிகமும் பாடியிருக்கின்றார்கள். மேலும்

இந்தத் தலத்திற்குத் திருக்கழுக்குன்றப்புராணம் என்ற ஒரு செய்யுட் புராணமும் உண்டு. மற்றும் பல புலவர்கள் பாடிய பல பிரபந்தங்களும் இருக்கின்றன. கோயில் அதிகாரிகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வரலாற்று நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள்.

**7. சரித்திரப் பகுதிகள்:** இந்தத் தலம் மிகப்பழமையானது. பல்லவர்காலத்துச் சின்னங்கள் அநேகம் இருக்கின்றன. பல்லவமன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வெட்டிய குடைமண்டபங்கள் ஆலயத்திலிருந்து இறங்கும் வழியில் இருக்கின்றன. இம்மண்டபங்களில் பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. பல்லவர் காலத்துத் தலைநகரான காஞ்சீபுரத்திற்கும், அவர்களுடைய துறைமுகமான மாமல்லபுரத்திற்கும் இடையிலே இந்தத் தலம் இருக்கிறபடியால் பல்லவர்களுடைய கல்வெட்டுக்கள் இங்கே காணப்படுகின்றன. பின்னர் வந்த அரசர்களும் இங்கே சாசனங்களைப் பதிப்பித்திருக்கிறார்கள். மேலும் இதனைப் பார்க்க வந்த ஐரோப்பியர்கள் பலரும் தங்கள் பெயர்களையும் பாறையில் வெட்டியிருக்கிறார்கள். மலைக்கோயிலில் 23 கல்வெட்டுக்களும், ஊர்க்கோயிலில் 9 கல்வெட்டுக்களும், பாறைகளில் கணக்கற்ற ரோமன் எழுத்துக்களும் காணப்படுகின்றன. சோழர் காலத்தில் இவ்வூரானது களத்தூர் கோட்டத்துக் களத்தூர் நாட்டு உலகளந்த சோழபுரம் என்ற பெயர் பெற்றிருந்தது.

---

## 3. சாத்திரப் பகுதி

# சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(புலவர். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்)

**ஒடுங்கிடா கரணந் தாமே ஒடுங்குமா றுணர்ந்தோ டுக்க**
**ஒடுங்கிடும் என்னின் நின்றதோடுங்கிடா கரணம் எல்லாம்**
**ஒடுங்கிட ஒடுங்க உள்ளஉணர்வுதான் ஒழியும் வேறாய்**
**ஒடுங்கிடின் அன்றி மற்றவ் வுண்மையை உணரோ ணாதே.**



என்பது, மேல், பொற்புறும் கருவி யாவும் புணராமைக்கு உபாயம் கூறிற்று.

இதன்பொருள் : வினையீட்டத்திற்கும் நுகர்விற்கும் முன்னிலையாகிய கரணங்கள் உயிர் சாக்கிரச் சாக்கிரத்தில் சிற்புழித் தாமே ஒடுங்கா. அக்கரணங்களை (ஒடுக்கும் முறை உணர்ந்து) ஒடுங்குமாறு ஒடுக்கின் ஒடுங்கும் என்னின், அப்பொழுது அவற்றை அறிந்து ஒடுக்கற்காக அவற்றொடு பொருந்தி நின்றதாகிய ஆன்ம போதம் ஒடுங்காது. கரணங்களனைத்தும் ஒடுங்க ஒடுங்க உள்ள உணர்வுதான் நீங்கும். (அதனால் கரணம் ஒடுங்கப் போதம் ஒடுங்குமென்பது பொருந்தாது.) அஃதாவது கேவலம் என்றதாகும். அவ்வாறு கேவலம் தோன்றாதவாறு, அக் கரணங்கள் வேறாகுமாறு காட்டப்பட்ட சிவஞானத்தான் ஒடுங்கினால் அன்றிப் பொற்புறு கருவி யாவும் புணராதவாறு சிவாநுபவமாகிய அவ்வுண்மையை உணர்தலரிது என்பதாம்.

கரணமெல்லாம் ஒடுங்கிட, அவற்றொடும் ஒடுங்க உள்ள உணர்வுதான் ஒழியும் எனலுமாம். உண்மை - சிவாநுபவம் பெறும் நிலை. உணர்தல் - உற்றுணர்ந்து பெற்று நுகர்தல். சிற்பரந் தோன்றப், பொற்புறு கருவியாவும் புணராவாறுள்ளச் செயலறுத்தலை வேறாய் ஒடுங்குதலென்று குறித்தருளினார். வேறொடுங்கி யுண்மையை யுணர்தல் குருருப தேசத்தாலெய்தற் பாலது. கருவிகள் தாமே அடங்கமாட்டா. ஜீவபோதத்தால் அடங்கினால், அப் போதம் அடங்காமல் நிற்கும். கருவிகள் அடங்கப் போதம் அடங்குமெனில், உள்ள சிற்றுணர்வும் அழிந்து கேவலம் எய்தும். எய்தவே, திருவருளால் கருவிகளைக் கூடாது நீங்கி அத் திருவருளுள் முழுகின் சிவத்தை யநுபவிக்கும் அவ்வுண்மையை உணர்தல் கூடும் என்றதாம்.

"முன்னுடை யவர்கள் தம்மை முக்கணன் பாதநீழ
லுள்ளிடை மறைந்து நின்றங் குணர்விறை லெய்ய லாமே"

என்றும்,

'தருவாய் எனக்குன் றிருவடிக் கீழோர் தலைமறைவே'

என்றும் வருந் தேவாரப் பகுதியால் வேறுப் ஒடுக்கும் ஒடுக்கம் புலனாகும். இதிற் பாச ஞானத்தாலறிய வொண்ணாமை யுணர்த்தினார். இனிப் பசுஞானத்தாலும் உணரப் படாமை கூறுவாரானார்.

பற்றிடுங் கருவி யாவும் படர்ந்துணர் வளிக்குங் காலை
உற்றறிந் திடுவ தோன்றின் உணர்வினின் உண்மை யாகும்
மற்றதும் பகல்வி ளக்கின் மாய்ந்திட வருவ துண்டேல்
பெற்றிடும் அதனை மாயப் பிறப்பினைஅறுக்க லாமே. (அஉ)

என்பது, "அறிவிலாமைச் சொற்பொருள் அதிதம் வந்து தோன்று" மைக்கு உபாயங் கூறிற்று.

இதன்பொருள் :— பற்றும் பொருள் எப் பற்றுங் கருவி (பொறிகள் எல்லாம் (கருவிகள் எல்லாவற்றிற்) படர்ந்து அறிவைக் கொடுக்குங் காலத்தில் (அஃதாவது உயிரின் இச்சை ஞானக்கிரியைகள் பரந்துச் சென்று பற்றும் ஏக தேச அறிவை அக்கால் காலத்தில் என்பதாம்) அக்கருவிகளைக் கொண்டு பொருள்களை உற்று ஒன்றினைக் கட்டி அறிவது உயிரினியல்பாகும். அக் கருவிகளோடு அச் சுட்டுணர்வாற் பற்றும் பொருளை யறியும் பசு ஞானமானதும் பகல் விளக்குப் போலச் சத்தி கெட்டுப் பரம்பொருளை யறியாதொழிக, வியாபக அறிவை விளக்கும் உண்மை ஞானப் பொருக்கம் வருவது உளதாகில், அச் சிவானந்தானுபவமாகிய உண்மையைப் பெற்றிடும். அப்பேற்றால், சாக்கிராதீத நிலையாகிய சாக்கிரபுக்கத்தைக் கொண்டு பிறப் பிறப்பாகிய வெடியை அறுக்கலாம்.

மற்றதும் என்ற மதுரைச் சிவப்பிரகாசர் குறித்த பாடமே கொண்டுக்கொள்ளப்பட்டது. 'அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே நின்றபடியே நிற்க முன் நிற்கும்' என்ற திருக்களிற்றுப் படியார் சான்ற 'ஒத்திட்டிருக்க உடம்போ டுயிர்தான் செத்திட் டிருக்கை'யே பகல் விளக்கின் மாய்வதாகும்.

இதுகாறும் சன்மார்க்க ஞான நிட்டை உணர்த்தப் பெற்றது. மேல் அந் நிட்டை பெற விரும்பினார்க்குப் பெறுமாறுணர்த்துகின்றார்.



முந்திய வொருமை யாலே மொழிந்தவை கேட்டல் கேட்ட
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அதுதா னாக
வந்தவா றெய்த நிட்டை மருவுதல் என்று நான்காம்
இந்தவா றடைந்தோர் முத்தி எய்திய இயல்பி னோரே. (அங)

என்பது முற்கூறிய சன்மார்க்க ஞான நிட்டை பெறும் ஞானமாபுணர்த்துகின்றது.

1. முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல்:— 'தன்னுள் மன்னும் அருள்' (66), 'உயிரின் மேவும் அருள்' (70), 'அதுவாய் ஆன்மாச் சுத்தமாம்' (73), 'அகிலமும் உணரும் ஈசனருள் உயிர் மேவலாலே' (76), 'உள்ளத் தோன்றிய வுணர்வு' (77), 'அதில் அறிவடங்கி மன்னிட' (74), 'முன்னுங் கண்டிடார் பின்னும், தொடர்வரும் அருளினையும் தம்மைக் காணாரைப் ஞானப் உணர்தலின்று' (79), 'தோன்றி நின்ற சிற்பரம்' (80), 'வருவது' (81) என்றுணர்த்தியவாற்றால் ஆன்மாவிற்கும் திருவருட்கும் உள்ள ஒருமை முந்தி விளங்கிற்று. அவ்வாறு முந்தி யுணர்ந்த திருவருளொருமையால், ஆரியனும் ஆசான் வந்தருளால் தோன்ற ஆன்மாவில் அடிஞானம் தோன்றும் ஒருமையால், முற்பிறவிகளிற் செய்த சரியை கிரியை யோகங்களின் முற்றுதலாலுண்டான திரிகரணமும் ஒருநிலைப்பட்டமையால், ஞானகுரு மொழிந்த ஞானோபதேசங்களைச் செவிவாயிலாகக் கொண்டுளத் தமைத்தல். "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கில் ஞானம்" என்ற (சித்தியார் 276) நான்கனுள் முந்திய கேட்டல் என்று, 'பெயரெச்சத்தைக் கேட்டல்' என்றதற் குரித்தாக்கியும் குரு மொழிந்தவற்றை ஒருமையாலே கேட்டல் என்று சேர்த்தும் பொருள் கொள்வதும் பொருந்தும்.

2. கேட்டல் சிந்தனை செய்தல் :— மந்தமாகாது முதிர்ந்து முறுகிய கேட்டலறிவால் நிருவிகற்பமாய்த் தோன்றிய பதி முதலிய முப்பொருளையும் அவை ஒன்றனில் ஒன்று வியாபக வியாப்பியங்களாகும் முறையையும் சிந்-

திந்து நிட்டை கூடுதலில் வேட்கை மிக்குடையராய், அக் குருமொழிப் பொருளிற் கருத்து ஒடுங்கி நுழைந்து முன்னொடுபின் மலைவற வேது திருட்டாந்தம் முதலியவற்றால் சிந்தித்தற் கருமையை மேற்கொண்டு மற்றொன்றினும் பற்று ஒன்றுமின்றிச் சீவன் முத்தரொடும் ஒத்துப் பேரறிவாகிய சிவமும் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற்றின் ஒளியும் கண்ணொளியும்போல் அத்துவிதமாய் நின்று ஆண்டுத் தாம் உணர்தல் அறியப் பெறாது சிவத்தோற்றம் ஒன்றே காணப் பெற்று, நிருவிகற்பம் சவிகற்பம் என்னும் இரண்டற்கும் இடைநிலத்தே நிற்றல். சேட்ட - கேட்டவற்றை கேட்டல். சேட்டல் என்ற பாடம் பிழையானது.

3. உண்மை தெளிந்திடல் :— இருவகைப் பாசவிகளும் ஆசிரியன் திருவருளால் நீங்கிக், கேட்கும் முறையிற் கேட்டுச், சிந்திக்கும் முறைமையிற் சிந்தித்துப், பின்பு அன்பு செய்து அடங்கி நின்று, கேட்டற் காலத்துப் பொருட்டன்மை பற்றித் தோன்றிய பேதமும் சிந்தித்தற் காலத்துக் கலப்புப் பற்றித் தோன்றிய அபேதமும் இல்லாவாறு தெரியனும் பரியனுமாயதோர் முறைமை பற்றி யெவற்றினும் ஒழிந்து நின்றே ஒன்றினும் பற்றிலனாய் வேறு தோன்றும் உண்மை விளங்கத் தெளிதல்.

4. அது தானாக வந்தவாறு எய்த நிட்டை மருவுதல்: வியாபகமாகிய உயிரின் இயல்பை இழப்பித்துக் கீழும் மேலும் ஏகதேசப் படுத்திச் செலுத்தும் வினைத்தளையிரண்டனையும், ஞானநூல் ஓதல்முதல் சிந்தித்தல்முடிவாகிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதலுணர்வு எனப்படும் அரத்தால் அறுத்து, காரணமாகிய இருவினையும் காரியமாகிய ஏகதேசச் செலவும் நீங்கப்பெற்று, அதனால், காரணங்களின் வயத்தில் ஆகாமல், இறைவனது வியாபகத்தினை எய்தி, எவ்வாற்றானுங் குறைவின்றி, இம்மையே ஜீவன் முத்தராகிப், பரமுத்தி நிலையில் தமது வியாபகம் எங்கணும் அறிவு விளங்கப் பெற்று முதல்வனோடொத்து நிற்கும் நிலையைப் பொருந்துதல் : என்று நான்காம் - என ஞானத்தினியல்பு சிறப்பு வகையால் நான்காகும்.



இந்த ஆறு அடைந்தோர் - இவ்வகையால் உண்மை ஞான நிட்டையை அடைந்த நல்லோர்.

முத்தி எய்திய இயல்பினோர் - வீடுபெற்ற தன்மையையுடையராவர்.

இது பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறிய இயலாத பதி ஞானப் பயனை அறிந்தடையுமாறுணர்த்திற்று.

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை உணர வொண்ணா திறையருள் ஞானம் நண்ணின்
தேசுறும் அகனுன் முனைச் சுற்றழி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை (அச)

என்பது, நால்வகை வாக்கின் பகுதியனவாகிய வேத முதலிய சொற்பிரபஞ்சமும் நிலம் முதல் நாதம் முடிய உள்ள பொருட் பிரபஞ்சமும் ஆகிய இரண்டும்பற்றி நிகழும் ஏகதேச ஞானத்தாலும் இவற்றைப் பற்றிப் படரும் பசுக்களின் செருக்கால் அநாதிமுத்தனைப் போல் யானும் பிரமமாவேன் என்னும் ஜீவ போதத்தாலும் நம்மை உடைய முதல்வனை உணர்தல் இயலாது. இறைவனது திருவடி ஞானத்தைப் பொருந்தின் சிவப்பிரகாசம் எய்தும். அச் சிவப்பிரகாசத்தால், பழைய சிற்றறிவு நீங்கிப் போய்ச் சேர்ந்து உயர்ந்த பர வீட்டில் நேசத்தொடும் நிற்பது உண்மை ஞானநிட்டை என்பதாம். (தொடரும்)

---

4. கவிப்பகுதி

## நீத்தாய கயம்

(அழகுமதியன்)

நீர் நிலைகள் பலவகையாக இருக்கின்றன. அகலம், ஆழம், நிலை, பெருக்கம், ஓட்டம் முதலிய பல நிலைகளைப் பொறுத்து அவைகள் மாறுபடுகின்றன. அவ்வந் நிலைகளுக் கேற்பப் பெயர்களும் மாறுபடுகின்றன. ஏரி, குளம், குட்டை, கண்மாய், ஊருணி, கிணறு, கேணி, தாங்கல், ஏந்தல் முதலான பெயர்கள் நிலவிற்கும் நீர் நிலைகளுக்குப்

பெயர்களாய் வழங்குகின்றன. இவைகளும் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறாக வழங்கப்பெறும். குளம், குட்டை என்பவைகள் பொதுவாகயிருக்கக் கேணி நெய்தல் நிலத்திலும், கிணறு முல்லையிலும், கண்மாய், தாங்கல், ஏந்தல் பாண்டி நாட்டிலும் வழங்கப்பெறுவன. மிகப்பெரிய நீர் நிலைகள் கடல், பெருங்கடல், வளைகுடா, விரிகுடா என வழங்கும். பாறையிலும், மணலிலும், ஊறிவரும் நீர்ப் போக்குகளுக்கு ஊறல் அல்லது ஊற்று என்று பெயர். இனி ஊற்றிலிருந்து வழிந்து ஓடுபவைகளுக்கு ஊற்றங்கால் என்று பெயர். ஏதோ ஒரு காலத்தில் வெள்ளம் ஓடும் பள்ளங்களுக்கு ஓடை அல்லது ஓடு என்று பெயர். பல ஓடைகளும், பல ஊற்றங்கால்களும் சேர்ந்து ஓடுவதற்கு ஆறு என்று பெயர். இவ்வாறு நீர்நிலைகள் நிலைக்கேற்றபடி பல பெயர்களைக் கொண்டிருக்கின்றன.

இனி, கயம் என்ற சொல்லும், ஒருவகை நீர் நிலைக்கே வழங்கப் படுகின்றது. அச்சொல் தொண்டை நாட்டு திருப்பதிக் கருகில் கசம் என்று வழங்குகிறது. நீர்கசிந்து வருவதால் கசம் என்ற பெயர் தோன்றியது என்பார்கள். இதனைத் திருப்பதி வட்டத்தில் வாழும் தெலுங்கர்கள் பொக்க என்ற சொல்லால் வழங்குவார். கசம் என்ற சொல் கயம் என்று மாறிற்று. நல், தாமரை, கயம் என்றார் ஔவையாரும். இச்சொல் மணிமேகலையில் நீர் நிலை என்ற பொருளில் 'துணி கயம் புகழ்பட' என்று வந்திருக்கின்றது. உபதேச காண்டத்தில் 'கடல்' என்ற பொருளில் "கயம் கரந்து உறை அரக்கரை" என்று காண்கின்றோம். இனி சிந்தாமணியில் "ஆழம்" என்ற பொருளில் "கணிச்சிகளில் கயம்பட நன்கு இடித்து" என்று இருக்கின்றது. கயம் என்பதற்கு ஆழம் என்ற பொருள் மலையாளத்தில் உண்டு. இவ்வாறு கயத்திற்கு மூன்று பொருள்கள் இருக்க "நீர்நிலை" அல்லது "குளம்" என்ற பொருளில் அப்பர் அடிகள் ஆண்டிருக்கின்றார். ஔவையாரும் அதே பொருளில்தான் ஆண்டிருக்கின்றார்கள். நற்றாமரைக் கயம் என்றால் நல்ல தாமரைக் குளம் என்பது



பொருள். இனி அப்பர் ஆண்டிருக்கும் சொற்றொடர் "நீத்தாயகயம்" என்பது. இச்சொற்றொடருக்கு இரண்டு பொருள்கள் கூறப்படுகின்றன. ஒன்று "நிலைத்தல் இல்லாத குளம்" என்பது. மற்றொன்று பெருவெள்ளம் பொருந்திய குளம் என்பது. இதைச் சற்று விவரிப்போம்.

'நீத்தாய' என்ற சொல் நீத்து + ஆய என்ற இரு சொற்களின் சேர்க்கை. நீத்து என்ற சொல்லின் பொருள் மூன்று வகையாக எடுக்கப்பட்டிருக்கின்றது. ஒன்று நீந்துகை என்ற பொருளில் ஐங்குறுநூறில் (162) "நீத்து நீர் இருங்கழி" என்று வந்திருக்கின்றது. மற்றொன்று நீந்தக்கூடிய ஆழமுடைய நீர், என்ற பொருளில் தொல்காப்பியம் சொல்லதிகாரம் (406) சேனைவரையர் உரையில் "யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப" என்று காண்கின்றோம் இன்னொன்று வெள்ளம் என்பது இப்பொருளில் வரும் அச்சொல் நீத்தம் என்றும் வரும். மதுரைக்காஞ்சியில் "நிவந்து செல்நீத்தம் குளம் கொளச்சாற்றி" என்று வெள்ளம் என்ற பொருளில் வந்துள்ளது. நீத்தம் என்ற சொல்லுக்கு மிகுதி என்ற பொருளுமுண்டு. அப்பொருளில் கம்பர் "நிறை நறும் கூந்தல் நீத்தம்" என்று கூறுகின்றார்.

மேலே கூறிய மேற்கோள்களிலிருந்து நீத்து ஆய கயம் என்ற சொற்றொடருக்கு மிகுதியாகிய வெள்ளம் கொண்ட குளம் என்று பொருள் கொள்ளலாம். வெள்ளம் மிகுதி ஆனதினால் நிலைபற்ற குளம் என்றும் கூறலாம். ஆகவே இச்சொல் சிறிதாகக் கசிந்து வரும் ஊற்று நீரைக் கொண்ட ஊற்றங்கால் குளத்திற்கு ஏற்றுச் சொன்ன சொல் அல்ல. பெருத்தவெள்ளமாக ஊற்று எடுத்து நிரம்பியிருக்கும் அமைதியற்ற பெரும் குளத்திற்கு எடுத்துக் கொண்ட ஒரு சொல் ஆகும். அப்படிப்பட்ட பொருளில் தான் அப்பாடிகள் 'நீத்தாய குளம்' என்ற சொற்றொடரை அமைத்தார் என்னலாம்.

இனி, அப்படிப்பட்ட குளத்தினுடைய தன்மைகளை ஒரு சிறிது விவரிப்போம். பெருங்குளங்களிலே வெள்ளம்

வந்து நிறைந்திருந்தால் அக்குளத்தின் பல பகுதிகள் பலவாறு இருக்கக்கூடும். அக்குளத்து நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அதற்குப் பல துறைகள் ஏற்பட்டிருக்கக்கூடும். சில துறைகள் நிலையற்றனவாய் இடிந்து பாழ்பட்டிருக்கலாம். சில வழுக்கும் தன்மை கொண்டிருக்கலாம். சிலவற்றில் முதலை முதலிய கொடிய பிராணிகள் வாழலாம். சில பாசம் நிறைந்திருக்கலாம். சிலவற்றுள் நோயுற்றவர்கள் இறங்கிக் குளிக்கும் இடங்களாயிருக்கலாம். சில ஆடுமாடுகள் கழுவும் இடமாயிருக்கலாம். இப்படிப்பட்ட துறைகளில் தூய்மையுள்ளவன் இறங்கிக் குளிப்பானா? ஆனால் அப்பெருங் குளத்தில் குற்றமொன்றுமில்லாத துறை ஒன்று இருக்கலாம். அதுதான் இறங்கி மகிழ்ச்சியோடு நீராடும்படியான சிறந்த துறையாக இருக்கும். அப்படிப்பட்ட துறையில்தான் நன்மக்கள் இறங்கி நீராடுவர். தம் உடல் மலத்தைப் போக்க நீந்தியும் நீராடுவர். அப்படிப்பட்ட துறையை சம்பந்தப் பெருமான் 'வேதநெறி தழைத்து ஓங்கும் மிகு சைவத்துறை' என்றார்.

இனி 'நீத்தாய குளம்' எது என்று ஆராய்வோம். இவ்வுலக வாழ்க்கை வெள்ளப்பெருக்கெடுத்த ஒரு பெருங்குளமாகும். அவ்வாழ்க்கை என்னும் குளத்தில் சமயங்கள் என்ற பல துறைகள் இருக்கின்றன. இத்துறைகளில் ஆன்மாக்கள் இறங்கி வாழ்க்கையாகிய நீராடுதலைச் செய்து அதன் பயன்களை அடையும். அப்படிப்பட்ட சமயத்துறைகள் பலவாறாக இருக்கக் காண்போம். நிலையாதன, பாழ்பட்டன, வழுக்கும் தன்மையன, கொடிய கொள்கை உள்ளன, பாசம் நிறைந்தன, நோய் தருபவன முதலியவைகளாய் இருக்கலாம். அப்படிப்பட்ட சமயங்கள் பல உண்டு. அவ்வாறான குற்றங்கள் இல்லாத துறை எதுவோ அதுதான் சிறந்தது. அந்தத் துறைதான் சமயாசாரியர்கள் போற்றிய துறை. அதையே சம்பந்தரும், அப்பரும் போற்றினார்கள். சம்பந்தர் கூறிய 'மிகுசைவத் துறையையே' 'நிலைக்கொள்ளும் வழித்துறை' என்கின்றார் அப்பர். 'நீத்தாய கயத்தில் நிலைக்கொள்ளும் வழித்துறை' ஒன்று உண்டு என்று அவர் கூறுகின்றார்.



நீர் நிறைந்த ஒரு குளத்தைக் கண்டவுடனே இளம் பிள்ளைகள் அதில் குதித்து முழுகி, நீராடி, அதனால் இன்பம் பெற விழைவார்கள். பத்துப் பிள்ளைகள் ஒரு குளத்திற்குச் சென்றால் அவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு நீரில் நீந்தி விளையாடுவார்கள். ஒருவரையொருவர் நீரில் அமிழ்த்தியும் தூக்கியும் விளையாடுவதுண்டு. நீந்தத் தெரியாதவர்கள் தத்தளிப்பதைக் கண்டு மற்றவர்கள் கேலி செய்வதும், சிரிப்பதும் உண்டு. இவ்வாறு விளையாடுபவர்களில் சிலபேர் பாசியைப் பூசிக்கொண்டு வெளிவருவதும் உண்டு சிலபேர் வேர்ப்பாசியில் சிக்கி மாள்வதும் உண்டு. சிலபேர் முதலையின் வாயில் அகப்பட்டுச் சாவதும் உண்டு. சிலபேர் தூய்மையான துறையில் நன்றாகக் குளித்துவிட்டுப் பேரின்பம் அடைவதுமுண்டு. இவ்வாறான அனுபவங்கள் வாழ்க்கைத் துறையிலும் காணலாம்.

இளைஞர்கள் பத்துப்பேர் குளத்தில் நீராடச் சென்றால் அக்குளத்தைக் காவல் புரிபவர் அவ்விளைஞர்களுக்கு யாதொரு கெடுதியும் வராமல் பாதுகாப்பார். அறியாத சிறுவர்களாயிருந்தால் அவ்விளைஞர்கள் நீரில் இறங்குவதற்கு முன்பே துறைகளுடைய நன்மை தின்மைகளான குணங்களை எடுத்துக் கூறி எச்சரிக்கை செய்வார். அவ்வெச்சரிக்கையை மனதில் வாங்கிக்கொண்டு நல்ல துறையில் இறங்கி தங்கள் மலங்களைக் கழுவிவிட்டுத் தூய்மையோடு கரைக்கு வருபவர்கள் உண்டு. காவலாளன் சொற்களைக் கேளாது தீய துறைகளில் இறங்கி மீளாது அழிபவர்களுமுண்டு. இவ்வாறு காவலாளன் சொற்களை இகழ்ந்துவிட்டு நீருள் செல்வதினால் கேடடைந்த நீர்ப்பகுதிகளுள் தள்ளிவிடப்படுவர் பலபேர். அவ்வாறு தள்ளிவிடப்பட்ட இளைஞர்களில் மருணீக்கியாரும் ஒருவராக இருந்தார். அவ்வாறு தான் அடைந்த ஓர் அனுபவத்தை,

"காத்து ஆள்பவர் காவல்இகழ்ந் தமையால்
நீத்து ஆய கயம்புக நூக்கியிட"

என்று கூறுகின்றார். உலக வாழ்க்கையிலே தன்னைக் காப்பாற்றுவதற்கு ஒரு பெரியார் ஏற்பட்டிருந்தும் அவர் தந்து கொண்டிருந்த காவலை இகழ்ந்தபடியால் பெருவெள்ளம் கொண்ட குளத்தில் தள்ளப்பட்டார். அந்தக் குளத்தில் மீட்சி பெற நிலையுள்ள வழித்துறை அறியாமலிருந்தார். இதனை மதிவந்த பிறகு அவர் கூறுகின்றார். இங்கே மருணீக்கியாருக்கு உலக வாழ்க்கையிலே காவல் புரிய இருந்தவர் அவர் தமக்கையாரான திலகவதி அம்மையார். அவர்களுடைய நன்மொழிகளைத் தேடாது அசட்டை செய்ததினால் சமணம் என்னும் பாழான துறையில் தள்ளிவிடப்பட்டார். கரையிலே நின்ற பெரியவர்கள் 'வாழ்க்கை உண்மைகளைக் கண்டுகொள்' என்று சொல்லியும் அவற்றைக் காணாதவராய் குளத்தில் விழுந்து நல்ல துறையை அறியாமலிருந்தார். பின்னால் வயிற்று நோயாகிய கேடு வந்த பிறகு காத்து ஆள்பவரின் நன்மொழி கேட்டு மீட்சி அடைந்தார். இவ்வுண்மையைத்தான் அருள்பெற்ற முதல் பதிகத்திலேயே அப்பரடிகள் மிகுந்த உணர்ச்சி பொருந்திய பச்சாத்தாபத்துடன் அருளிச் செய்கின்றார்.

இனி, அப்பர் அடிகளுடைய வாழ்க்கைச் சரிதத்தை ஒட்டி இப்பாடற் பகுதிக்குப் பொருள் கொள்ளாமல் பொதுவாகவும் பொருள் கொள்ளலாம். அவ்வாறு பொருள் கொள்ளும் காலத்தில் காத்தாள்பவர் என்ற சொல்லுக்கு நம்மைக்காக்கும் இறைவன் என்று பொருள் கொண்டு "அவனுடைய காவலை அசட்டை செய்துவிட்டு வேறு துறையில் வீழ்ந்து விட்டேன். அப்படித் தவறிவீழ்ந்தவனை மீட்டுக் கொள்ளுவது அவனுடைய அருட்செயலாயிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் சூலைநோய் தந்து வருத்துவது சரியா? தவறின போதும், தவற்றை மன்னித்துப் பாதுகாப்பது பெரியார் கடமையாதலின் தற்போது இறைவன் மன்னித்தலை ஒழித்துத் தண்டனை விதித்தது கேட்டறியாத செய்தியாய் இருக்கிறதல்லவா?" என்ற கருத்து, "வார்த்தை இது ஒப்பது கேட்டு அறியேன்" என்ற சொற்றொடரினால் தொனிக்கின்றது. அப்பரடிகள் இறை



வனை நோக்கிப் பெரியார்களுடைய கடமை பொறுப்பதே ஆக இருக்கத் தன்னிடம் மட்டும் அதனைக் காட்டாது சூலை நோய் தந்து கடுந்தண்டனை கொடுத்தது யாது காரணத்தினாலேயோ என்று வியந்து வணங்குகின்றார். இவ்வாறு வயிற்று நோய் கொடுத்ததை இனிப் பொறுக்கமாட்டேன் என்று கூறி மன்னிப்புக் கேட்கின்றார். தான் இயற்றிய குற்றங்களை ஒப்புக் கொண்டு தன்னை எவ்வாறாயினும் மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி கூறும் இந்த அடைக்கல விண்ணப்பம் மிகச்சிறந்த முறையில் அமைக்கப் பெற்றிருக்கின்றது. இதன் அடிப்படைப் பொருளை யாவரும் ஆராய்ந்து அறிதல் வேண்டும். பாசுரத்தை இனிக் கூறுவோம்:

"காத்து ஆள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொலி
நீத்து ஆய கயம்புக நூக்கியிட
நிலைகொள்ளும் வழித்துறை ஒன்று அறியேன்
வார்த்தை இதுஒப்பது கேட்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்து ஆர்புனல் ஆர் அதிகைக் கெடில
வீரட்டானத்துஉறை அம்மானே"

(இதற்குப் பதவுரை) ஆர்த்து - ஆரவாரித்து, ஆர் - நிறைந்த, புனல் ஆர் - நீர் பொருந்திய, அதிகைக் கெடில வீரட்டானத் துறை அம்மானே - திருஅதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள இறைவனே, கரைநின்றவர் - கரையில் நின்றவர்களாய், காத்து ஆள்பவர் - (வீழாமற்) காத்தாள்கின்றவர்களது, காவல் - பாதுகாப்பை, இகழ்ந்தமையால் - அவமதித்த காரணத்தால், கண்டுகொள் என்று - நீயே அறிந்து கொள்வாயென்று சொல்லி, நீத்தாய கயம் - நிலைத்தலில்லாத குளத்தில், புக - முழுகுமாறு நூக்கியிட - தள்ளிவிட, நிலைகொள்ளும் - நிலைபெறும், வழித்துறை - வழியாவது துறையாவது, ஒன்று - ஒன்றை, அறியேன் அறிகின்றேனில்லை, இது ஒப்பது வார்த்தை - (தள்ளி நீயே கண்டுகொள் என்று சொல்லும்) இதுபோல்வதாகிய வார்த்தையை, கேட்

டறியேன் வேறெங்கும் கேட்டறிந்தேன் இல்லை, வயிற்றோடு-வயிற்றினிடத்துக் குடரோடு, துடக்கி முடக்கியிட-கலந்து முடக்கியிட, ஆற்றேன்-பொறுக்கமாட்டேன் என்றவாறு.

இத்திருப்பாசுரத்தின் கருத்து என்னவெனில், “திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனே, கரையில் நின்றவர்களாய் வீழாமல் காக்கின்றவர்களுடைய பாதுகாப்பை அவமதித்த காரணத்தினால், ‘நீயே அறிந்து கொள்வாய்’ என்று சொல்லி, நிலைத்தல் இல்லாத குளத்தில் முழுகுமாறு தள்ளிவிடப்பட்ட யான், நிலை பெறும் வழியாவது துறையாவது ஒன்றையும் அறிகின்றேனில்லை. தள்ளி நீயே கண்டு கொள் என்று சொல்லும் இது போல்வதாகிய ஒரு வார்த்தையை வேறெங்கும் கேட்டறிந்தேனில்லை. என் வயிற்றினிடத்து குடரோடு கலந்து முறுக்கிவரும் இந்த நோயை யான் சகிக்கேன்” என்றறிக.

---

# துகளறு போதம்

(தருமையாதீனப்புலவர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

துகளறு போதம் என்னும் பெயரியதொரு நூல், சைவசித்தாந்தத்தின் முடிபாகிய சிவானந்தாநுபவத்தை விளக்குவது. அது சிற்றம்பல நாடிகளால் அருளப்பட்டது. அதனைக் குருமுகமாக உணர்தல் வேண்டும். தானே கற்றுணர்வோர் அதிற் கூறும் சிவாநுபவத்தை எய்துவாரல்லர். இக்காலத்தில் தக்க குருவைப் பெறுதல் அரிதாதலின், தாமே கற்கத் தொடங்கி, சிவஞானபோதம் முதலிய உண்மை நூல்களையும் இத் துகளறுபோதம் ஆகிய அநுபவ ஞானத்தையும் தவறுற அறிந்து, தம் முடிபே செம்முடிபெனக் கொண்டு தாமுந் தடுமாற்றத்தினுற்று, தம்மைச் சிவஞானியெனக் கொண்டவரையும் தவற்றிற் செலுத்துகின்றனர் சிலர். இந்நூற் காப்பில், இதனை உணர்த்தப்பெறுவது சிவானந்த அநுபவமே என்றதொன்றே போதிய சான்றாயினும், சிறிது விரித்து எழுதுகின்றேம்.



துகளறுபோதம் என்பது குற்றமற்ற ஞானம் என்ற பொருளைக் கொண்டது. துகள் என்பது ஈண்டு ஆன்மாவின்கண் உண்டாய குற்றம். ‘சுருதிகள் பலநல முதல் கலை துகள் அறுவகை பயில்வொடு’ (திருஞானசம்பந்தர் திருச்சிவபுரம்- சு) என்று கலைபயில்வால் துகளறுதல் கூறப்பட்டது. ‘துகள் ஏதும் இல்லானை எம்மானை என் மனத்தே வைத்தேனே’ என்று (அப்பர்-திருக்கச்சியேகம்பம்- 7) முதல்வனுக்குத் துகளின்மையும் ஆன்மாவிற்குத் துகளுண்மையும் முறையே கூறியுங் குறித்தும் நிறுத்தப்பட்டன. “தூக்கி முன் செய்த பொய் அறத் துகள் அறுத்து எழுதரு சுடர்ச்சோதியாக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே” என்னுந் திருவாசகத்தால், ஆன்மாவிற்குத் துகள் இருந்து அறுக்கப்பட்ட உண்மை உணர்த்தப்பட்டது. ஆன்மாவின்கண் உள்ள துகள் என்பது, மல நீங்கும் பருவத்தை யுற்று, மெய்யுணர்விற் பயிலுங்கால், அவ்வான்ம போதம் துகளறுத நிலையதாய் ஐயம் திரிபு நீங்காதிருத்தலின், அத் துகளறுமாறு முடிந்த முடிபான குருபதேசம் எய்துமாயின், அதனைத் ‘துகளறு போதம்’ என்று கொள்வர் உண்மை ஞானத்தார். அத் துகளறு போதத்தை உணர்த்துவதால் இந் நூலுக்கும் அப் பெயர் எய்திற்று. துகள் என்பதன் மரூஉவே, தூள் என்பது. போதத்திற் படிந்த தூள் அறுவதே துகளறுபோதம் ஆம்.

மூன்றுதிறத் தணுக்கள் செயுங் கன்மங் கட்கு
முன்னிலையா மூவிரண்டாம் அத்துவாவின்
ஆன்றமுறை அவை அருத்திமலம் முதிர்வித்து
அரும்பருவம் அடைதலுமே ஆசான் ஆகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்து அங்கு அத்துவாத் துடக்கறவே சோதித்து
ஏன்றவுடற் கன்மம் அநுபவத்தினால் அறுத்து இங்கு
இனிச்செய் கன்மம் மூலமலம்ஞானத்தால் இடிப்பன்

என்னுஞ் சித்தியாருள், ‘கன்மத்துகள்’ என்றதும் ஈங்கு உணரத் தக்கது. ‘துகளறு (சங்கற்ப விகற்பங்களெல்லாந் தோயாத) அறிவு’ என்றார் தாயுமானாரும்.

இத் துகளறு போதத்தை உண்மை நெறிவிளக்கத்தையும் சமன் வயம் செய்துணர்த்திய பெரியார் அவ் வுண்மை நெறி விளக்கத்தின் உரையில் எழுதியதை இங்கறிதல் அத்தியாவசியமானது.

"துகளறுபோதம் முப்பதவதாரமும் உண்மை நெறி விளக்கம் ஆறுபாட்டினும் தசகாரியமாய் அடங்கிவருவதற்கு வகை: என்று குறித்து, பூதப் பழிப்புமுதல் சகல தரிசனம் முடியுமளவும் உள்ள எழும் முதற்பாட்டில் அடங்கி வருவது காண்க என்றார். கேவலம் முதல் பரமாநந்த யோகம் முடியவுள்ள இருபதும் இரண்டாம் பாட்டில் அடங்குவதறிக என்றார். அதிலேயே சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் மூன்றும் அடங்கும் என்றும் எழுதினார். ஆறும் பாட்டில், பரமாநந்த போகம் பரமாநந்த மேலீடு பரமாநந்த அவசரம் மூன்றும் அடங்கும் என்றார். "இங்ஙனங் கூறும் ஆறுபாட்டினும் பாசவவதாரம் ஏழும் பசுவவதாரம் பதினைந்தும் பதியவதாரம் எட்டும் ஆம். முப்பதவதாரத்தையும் தசகாரியமாக அடக்கிக் கூறியது காண்க" என்று முடிவினுரைத்தார்.

'தற்காண்டல் சாக்கிரமாம் தற்பரையே சொற்பனமாம்
தற்காணு வெற்றவெறுந் தற்பரையே — நற்சுழுத்தி
ஞானனந் தம்துரியம் ஞானசுகா தீதத்தே
தானுகா வுண்மைஅதீ தம்' (சிவாநந்தமாலை – 36)

என்றும்

'பாயிருள் நீங்கி ஞானந் தனைக்காண்டல் ஆன்ம ரூபம்'

என்றும் வரும் வசனப்படி

1. ஞானதரிசனமுமாம் சாக்கிரத்தில் பதின்மூன்றும் (13)
2. பரைதரிசனமாம் சொப்பனத்தில் நாலும் (4)
3. சுத்தபார யோகமாம் சுழுத்தியில் நாலும் (4)
4. பரமாநந்த போகமாந் துரியத்தில் ஆறும் (6)
5. பரமாநந்த போகமாந் துரியா தீதத்தில் மூன்றும் (3)

ஆக அஞ்சவத்தையிலும் அடங்கி வருவது காண்க என்று முடித்துவிட்டார்.



இவ்வாறெழுதியவற்றை நன்குணராதார் ஒருவர் தசகாரியமே முப்பதவதாரமாகக் காட்டப் பெற்றன என்று எழுதியிருக்கின்றார். ஒருவர் அதை ஆதரித்து, உண்மையை மறுத்து ஒரு மூலையில் தாம் பெற்ற இடத்தில் இரகசியமாக எழுதியுள்ளார். இவ்விருவரும் குருவழியாகச் சைவசித்தாந்தங் கற்றவரல்லராதலின், அவர்க்கு இது குற்றமுமாகாது. ஆகாதேனும், உண்மையை உணர்ந்து கொள்ளாது ஒழிந்ததுமன்றி, குருவழி அறிந்து எழுதிய உண்மையை மறுத்தது குற்றம் அன்றோ ?

உண்மைநெறி விளக்கத்தின் உரையாசிரியர் 'முப்பதவதாரத்தையும் தசகாரியமாக அடக்கிக் கூறியது' 'அவதார முப்பதும் அஞ்சவத்தையிலும் அஞ்சவதாரமாய் அடங்கி வருவது' என்றதால் அஞ்சவத்தையின் விரிவும் தசகாரியத்தின் விரிவும் ஆகிய இரண்டுமே துகளறுபோதம் என்று கொள்ளல் ஏற்றதாமோ ?

ஞானதரிசனமாம் சாக்கிரம் என்றது ஒன்றே இவ்விருவர் போலிக் கருத்தை வெளிப்படுத்துமே. கேவலாவத்தையும் சகலாவத்தையும் நீங்கி நின்ற சுத்தாவத்தையில் ஞானதரிசனத்தில் தொடங்குவது இத் துகளறுபோதத்திற்குரிய சாக்கிரம் என்றால், இவர்கட்கும் இதன் உண்மையாராய்ச்சிக்கும் வெகுதூரம் உண்டு எனக் கூறலும் வேண்டுமோ ? 'துகளறுபோதக் கட்டளை' என்னும் நூலின் முதற்கண் உள்ள பகுதியை ஒருமுறையேனும் கற்றுணர்ந்தவர் தசகாரியத்தின் விரிவே துகளறுபோதத்துட் கூறும் முப்பதவதாரமும் என்று கூறியொழிவரோ ? 'அதிதீவிரமாகிய நாலாம சத்திநிபாதம் பிறந்த ஆத்மாவைத் தேர்ந்த ஆசாரியன்'........அவனது அறிவு உடன்படத் துகளறுத்து இசைவிக்கப் பொருந்தின முறைமையைச் சொல்லுங் காரணத்தால் இந் நூலிற்குத் 'துகளறுபோதக் கட்டளை' எனப் பெயராயிற்று. தசகாரியத்தின் தொடக்கம் அதி தீவிரமாகிய நாலாம் சத்திநிபாதத்தில் ஆமோ ? அன்றியும், "ஆணவமலத்தையும், புண்ணியபாவ வலிகளையும், தநுகரண புவனபோகங்களையும், மகாமாயையையும்,

திரோதாயியையும் உனக்கு நாம் அறிவிக்க நீ அவற்றை அறிந்து பஞ்சமலங்களையும் பதினெட்டவத்தைகளையும் விட்டு நீங்கி, கர்த்தாவின் செயல் ஒழிந்து உன் செயல் இல்லை எனக் கண்டு, அகண்ட பரிபூரணமான பரமானந்த சொரூபத்திலே நிறைந்து நின்று அநுபவிப்பாயாக" என்று துகளறுபோதத் தொடக்கத்துக்கு உரியதாகக் கூறிய இது தசகாரியத் தொடக்கத்துக்கு எய்துமோ ?

'உற்ற சரியை, ஒழியாத நற்கிரியை, குற்றமிலா போகக் குறிநெறியும் முற்றிப் பிறந்தார்கள் தாம் அறியப் பேசு'ம் துகளறுபோதம் துகள் அறும், அறுகின்ற, அற்ற போதமே யாகாது (அவ்வாறு பிறவாதார்க்குரிய தச) காரிய மாகுமோ ? போதம் - ஞானம். காரியம் - கிரியை. போதம் காரியமாதல் பொருந்துமோ ?

பூதப்பழிப்பு முதலிய தலைப்புக்களையும், கேவலம் கேவலதரிசனம் கேவலாதீதம் தத்துவாதீதம் சகலதரிசனம் முத்திசாக்கிரம் சாக்கிராதீதம் சுகாதீதம் முதலிய தலைப்புக் களை யுணர்ந்தாலேயே தசகாரியம் வேறு துகளறு போதம் வேறு என்று நன்கு விளங்கும். காரணாவத்தை மூன்றனுள் சுத்தாவத்தையின்கண் நிகழும் தசகாரியமும், அத் தச காரியத்துள் சிவ தரிசனம் சிவபோகத்தில் தொடங்கித் திகழும் துகளறு போதமும் வெவ்வேறுதலை யுணர்ந்து தானே, உண்மைநெறி விளக்கத்தின் உரையாளர் ஒருவர் முப்பதவதரத்தையும் மூன்று பாட்டிலும் அவற்றிற் சொல் லிய தசகாரியத்திலும் அஞ்சவத்தையிலும் அடங்குமா றுணர்த்தினர். தசகாரியத்துள் அடங்காதன எவையேனும் உளவோ ! நிலைவேறுபாட்டின் நுட்பத்தினால் வகைப்படும் உண்மை உணரும் மதுகையில்லார்க்கு எல்லாம் ஒன்றேயாம். தசகாரியம் சுத்தாவத்தையின் நிகழ்ச்சியாயிற்றே ! துகளறு போதத்தில் இருபத்திரண்டாவதாகச் சுத்தாவத்தை நிற் கின்றதே ! இரண்டும் ஒன்றெனக் கொள்ளல் அறிவின்பாற் படுமோ! முத்திச் சகலம், பெத்தச்சகலம், அருட் கேவலம், மருட் கேவலம், முத்திசாக்கிரம், சாக்கிராதீதம், பரைய தீதம், சிவபூமி, சுகாதீதம், பரமசுகம் ஆகியவற்றைத் தச



காரியத்தால் அறியவல்லார் உளரோ ? தசகாரியமும் துக ளறு போதத்தவதாமும் சன்மார்க்கம் என்ற ஒன்றில் அடங்குவதால் எல்லாம் சன்மார்க்கத்தின் விரிவே என்று எளிதில் உரைப்பதை விட்டுத் தசகாரியத்தின் விரிவென்பது மிகையன்றோ ?

ஞானபூசை ஐந்து என்றும், ஞானம் நான்கு என்றும், உண்மைஞானம் ஒன்றே தசகாரியமாம் என்றும், தசகாரி யத்துள் சிவதரிசனத்தின் முடிவிற் றொடங்கி முற்றுவது துகளறு போதம் என்றும் ஞானோபதேச பரம்பரையின் எய்தும் உண்மையை இப்போலிச் சைவசித்தாந்தி உணர்வ தற்கு இன்னும் எத்தனையோ காலம் செல்லும். தாயுமான வர் எந்நாட்கண்ணியுள் இத் துகளறுபோதத்தை விளக்கி யருளியவாற்றை இவர் அறியும் நாள் எந்நாளோ ?

திருவாவடுதுறையின் புதுப்பதிப்பின்கண் ஆறுபக் கத்திலுள்ள ஐந்து பாக்களையும் ஒருங்குணர்ந்தார் இத் துக ளறு போதத்தின் உண்மையைப் பற்றிய கருத்து வேறு பாட்டை அறிவர். நூறு பாட்டுள்ள துகளறு போதத்தின் முடிவிற் கொடிக்கவியொன்று சேர்ந்து நூற்றொன்றாகியதும்,

" சாக்கிரம் பதிதொன்பது கனவு தானெனன்று
தூக்குசுழி ஒன்று துரியம்எட்டு — நீக்கித்
துரியாதீ தம்ஒன்று சுத்தவத்தை முப்பான்
சரியத் துகளறுபோ தம் "

என்பதும்,

" சாக்கிரம்தான் ஈராறு சார்சொப்பனம் ஆறு
நீக்கும் சுழுத்தியொன்று நேர்துரியம் — நோக்கி
ஒருமூன் றதீதாம்தான் ஓராறும் நாலேழ்
தருமே துகளருபோ தம் "

என்பதும் வேறுபடுவதும், இவற்றுள் பின்னதே

" திருவருள் விளையுந் திறம்பல எனினும்
ஒருவகை இருபத் தெட்டு "

என்றதொடும்

"தான்எழு நான்கெனச் சாற்றிய பின்னர்"

என்றதொடும் ஒத்து உண்மை யுணர்த்திற்று என்பதும் உணர்வது அறிவர் கடனாகும். விரிவஞ்சி இக்கட்டுரை இவ்வளவில் நிறுத்தப்பட்டது.

---

# ஆவின் பெருமை

(அ. ந. ப. திருஞானசம்பந்தம்)

[மலர் 26; இதழ் 1; 46-ம் பக்கத் தொடர்ச்சி]

**ஆவின்பாலும் - அறவழிகளும்:** பசுக்கள் பல வகைப்பட்ட உருவமுடையன. எனினும் அப்பசுக்கள் அளிக்கும் பால் பலவகைப்பட்ட உருவம் உடையனவா? அல்லவே! இவ்வுலகத்தில் அறத்தைச் செய்யும் வழிகள் பல்வேறு உருவான, நிறமான பசுக்களை யொத்ததாகும். அதனால் பெறும் அறத்தின் பயன்கள் பாலைப்போல ஒரு தன்மையுடையனவேயாகும்.

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவினை வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு.

—நாலடியார்

Although cows of diverse from the milk they yield is not diverse. Like the milk, the path of virtue is one and like the cows it takes many forms.

**ஆவின்பாலும் - பெருமையும்:** பாலொடு நீர் கலக்கப்பெறுகிறது எனக் கொள்வோம். அப்பொழுது பால் என்ன ஆகிறது? அதன் நிலையில் சற்று நீர்க்குமே தவிர நிறம் மாற்றங் கொள்வதில்லை. ஆனால் நீர் என்ன ஆகிறது? நீரும் வெண்மையாக அல்லவா மாற்றம் உறுகிறது. அதைப் போலக் கல்வி, கேள்வி, குணநலன்களால் நிரம்பப்பெற்ற சான்ற பெருமக்களிடத்து உறவுகொள்ளுங்கால், நற்குண நற்செய்கையில்லா கீழ்மகனுடைய சிறுமைத் தன்மையும் தோன்றாது நீங்கிவிடும் என்பதாகும். இதைக் கூறுபவர் யார்? நாலடியார் புலவர் ஒருவர்தான்! அவர் பாடலைக் காண்க.



பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்—தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சேர்ந்து.

—நாலடியார்

Water, when milked with milk, will appear as milk and not as water, judged by its colour. Like wise the littleness of the little once will disappear when seen in union with the greatness of the great.

**திருவெண்ணீற்றின் சிறப்பு:** நெய்யில்லாத உண்டியும் பாழ்; ஆறில்லாத ஊரும் பாழ்; இல்லிற்கிசைந் தொழுகும் பெண் இல்லில் இன்றேல் அதுவும் பாழ்; அதைப்போல மக்களாய்ப் பிறந்திருப்பவர்களுக்கு நெற்றியுளது என்று நம்பினால் அந்நெற்றியில் நீறிடாவிடின் அதுவும் பாழே! பசுவின் சாணத்தை அக்கினியினாலே தகித்தலால் உண்டாவதே திருவெண்ணீறு. இதன் பெருமையை நாயன்மார் ஒருவர் மூலம் தெளிவுற உணரலாம். அன்றியும் அதன் சிறுநீரே பஞ்சகௌவ்யம் எனச் சடங்குகள் அனைத்திற்கும் பயன்படுத்துகிறோம்.

மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்திர மாவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
வேதத்தி லுள்ளது நீறு; வெந்துயர் தீர்ப்பது நீறு;
போதந் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு;
முத்தி தருவது நீறு; முனிவ ரணிவது நீறு;
பத்தி தருவது நீறு; பாவவி னியது நீறு.

—திருஞானசம்பந்தர்

பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்கரவம்.
பேசுவதும் திருவாயான் மறைபோலுங் காணேடி.

—மாணிக்கவாசகர்

18687

வணங்கவேண்டிய நாட்டிலே வதையா? இந்திய நாட்டிற்கு இணையுள்ள நாடு இல்லை என்று வாய்ப்பேச்சு முழக்குவோர் பலர். மோனத்தில், தானத்தில், கொல்லாமையில் சிறந்தநாடு நம்நாடு என மார்தட்டுவோர் பலர். இந்தியாவைப் பொறுத்தமட்டில் நாளொன்றுக்குக் கொல்லப் பெறும் பசுவின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? (7200). ஆண்டொன்றிற்கு எவ்வளவு என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆங்கிலர்கள் பசுஊனை மிகுதியாக விரும்பியுண்பர் என்பர். அவர்களுக்கு எவ்வகையிலும் குறைந்தவர்கள் இந்திய நாட்டு மக்கள் அல்லர் என்று கூறும் முகமாக நாட்டின் பல பகுதிகளில் சுவையறிந்து, அனுபவித்து உண்போர் தொகை மிகுதியாகி வருகிறது. இது வருந்தத்தக்க செய்தியல்லவா? கொல்லா விரதம் நாட்டில் நிலவவேண்டுமென்று, தென்பகுதியில் வள்ளுவர், தாயுமானார், இராமலிங்கர் போன்றார் தோன்றி முழங்கினர். வடபகுதியில் துளசிதாஸ், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமதீர்த்தர் போன்றார் தோன்றி முழங்கித்தான் சென்றனர்.

அவர் முழங்கிச் சென்ற அறவுரைகளையெல்லாம் எங்கேயோ தள்ளிவைத்துவிட்டு மக்கள் தங்கள் போக்கிற்கிணங்க நடக்க ஆரம்பித்துள்ளனர் என்பதற்குப் பசுவதையுடன் பசுக்கொலையுமே கரியாகும். சட்டம் என்ற கொள்ளி வாய்ப்பேயின் வாயுள் அகப்பட்ட பின்னரோ, அறிவைத் திருத்திக்கொள்ளவேண்டும். அற்றன்று! காலத்திற்கொப்ப, தற்போழ்து உண்மைநிலை அறிவிக்கும் கல்வி உறங்கிவிட்டமையால் அன்றோ எல்லாக் கெட்டச் சூழ்நிலைகளும் பிடர் பிடித்து உந்துகின்றன. அறவுரை கூறுவோர் அருகிவிட்டனர்; மறவுரை கூறுவோர் பல்கிவிட்டனர். அறிவில், உள்ளம் நல்வயப்படுங் காலத்தே, நல்லுணர்ச்சி செயலாற்றத் தொடங்கும் பொழுது யாதும், எவையும், யாவும் நம்பால் நலத்தைச் சேர்க்காதா? வறட்டு அறிவுதான் நாட்டிலே வன்மையாகப் பரவுகிறதே! நல்லறிவிற்குத் தோன்றியுள்ள பஞ்சமும் பங்கீடும் நீங்கி அது தலையாய இடத்தைப்



பெறுங்காலத்தே எல்லாம் நலனெய்தாதா? நல்லறிவுபெற முன்னிற்பது எது? இறையருள் தோய்ந்த எழில்சேர் கல்வியும், ஆத்மஞானத்தை அளவிலா அன்புடன் ஈயும் கல்வியும், ஊனமில் குணங்கள் உலகவர்பால் பரப்பும் உண்மைக் கல்வியும் அன்றோ தேவை? ஆதற்கு ஆவன செய்யின் எல்லாச் சிறப்புகளும் நாட்டிலே கொழிக்காதா என்ன?

---

## 8. விரிவுரைப் பகுதி

# 1. உணவுக் கொள்கை

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கிறிஸ்தவப் பிரசங்கியார் கிறிஸ்தவ மாணவர் கழகத்தில் ஒரு பேச்சை நிகழ்த்தினார். அப்பேச்சு முடிந்ததும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கலாம் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். பலபேர் பல கேள்விகளைக் கேட்டார்கள். ஒவ்வொன்றுக்கும் விடை கூறிக் கொண்டு வந்தார். அப்போது ஒரு வாலிபர் மரக்கறி உண்ணலாமா, நிணக்கறி உண்ணலாமா என்று கேட்டார். அப்பிரசங்கியார் இரண்டையும் உண்ணலாம் என்றார். அவ்வாலிபர் நிணக்கறியைப் பெறுவதற்கு உயிர்க் கொலை செய்யவேண்டுமே அது கூடாது அல்லவா என்று மறுபடியும் கேட்டார். அதற்குப் பிரசங்கியார் மரக்கறியிலும் உயிர்க்கொலை இல்லையா, ஜே. ஸி. போஸ் அவர்கள் செடிகளுக்கும் உயிர் உண்டு என்று விஞ்ஞான முறையிலும் நிரூபித்திருக்கிறதில்லையா என்று விடை சொன்னார். ஆகவே மனிதனோ அல்லது வேறு பிராணியோ உடலை வளர்க்க வேண்டும் என்றால் யாதாவது ஓர் உயிருள்ள பொருளின் உடலைத்தின்றே ஆகவேண்டியிருக்கின்றது. அதற்காக செடியோ, பிராணியோ இவற்றைக்கொன்றுதான் தம் உடலைப் பெருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த உயிர்க்கொலை இன்றியமையாததாதலால் குற்றமாகாது என்ற முடிவு ஏற்படுகிறதல்லவா?

உயிர்க்கொலை கூடாது என்று சொல்வதற்கு அடிப்படையான காரணம் என்ன? கொல்லப்படும் உயிர் அடை

யும் துன்பம்தான் காரணமாகும். உண்பதற்காகக் கொல்லப்படும் ஆடோ, மாடோ, கோழியோ கொல்லப்படும் காலத்தில் அளவில்லாத தீங்கு அடைகிறதல்லவா? அத்தீங்குகளைக் கண்ணால் பார்த்துச் சகிக்கமுடியுமா? ஒரு தேரையைப் பாம்பு விழுங்கும்போதும், ஓர் ஆட்டைப் புலி கடிக்கும்போதும், அவை படும் அச்சமும், துன்பமும் சொல்லத் தொலையுமா? ஆனால் ஒரு மரத்தை வெட்டும் போதும், பயிரை அறுக்கும் போதும் மரமோ, பயிரோ துன்பமடைவதாகத் தெரிகிறதில்லை. அவைகள் அடையும் துன்பமும், குறைவாயிருக்குமென்பர். மேலும் விஞ்ஞான முறையில் பார்த்தாலும் மரமோ, பயிரோ வளர்ந்து கொண்டிருக்கையில் வெட்டினாலும், அறுத்தாலும் அவைகளுக்குத் தீங்கு நேரிடுமதான். ஆனால் வளர்ந்து முதிர்ந்த பிறகு அத்தனைத் தீங்கு உணராது.

நாம் உண்ணும் மரக்கறிகள் எப்படிப்பட்டவை? தானியம், காய், பழம் முதலியவைகள்தான். தானியமோ பயிர் முதிர்ந்த பிறகுதான் அறுத்து எடுக்கப்படுகின்றது. அதனாலே பயிரின் வாழ்க்கை குறைக்கப்படுகிறதில்லை. கொடியும், காய்களும், மரத்தின் பழங்களும் விளைந்த பிறகுதான் எடுக்கப்படுகின்றன. அவைகளால் கொடிக்கோ மரத்திற்கோ உயிர் போவதில்லை. ஆகவே, தீங்கு மிகக் குறைவு பட்டதல்லவா? மேலும் மரம் செடி முதலிய தாவரங்கள் ஓரறிவுபெற்றவைகள். பறவைகளும், விலங்குகளும் ஐயறிவு பெற்றவைகள். ஆகவே ஓரறிவு பெற்றவைகளைக் காட்டிலும் ஐயறிவு பெற்றவைகள் ஐந்து மடங்கு துன்பமடையும். மரக்கறியோ பக்குவமடைந்த பிறகு எடுக்கப்பட்டால், ஊனக்கறியோ உயிர் வளர்ந்து கொண்டிருக்கையிலேயே கொலைபுரியப் படுகிறது. இந்த வேற்றுமைகளை மேல் சொன்ன பிரசங்கியார் உணராமலேயே விடை சொன்னார்.

இனி, மற்றொரு தன்மையையும் ஆராயவேண்டும். உணவு வகைகள் மூன்றுவிதக் குணங்களைக் கொண்டுள்ளன. சாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்று அக்குணங்களின்



பெயர். அவ்வுணவுகளின் குணங்களைப் பொறுத்து அவ்வுணவுகளை உட்கொள்ளும் மக்களின் பண்பாடும் இருக்குமென்று கண்ணன் கீதையில் கூறியிருக்கின்றான். மரக்கறியில் சாத்துவிக உணவுகள் உண்டு. அச்சுவைகள் மீறியுள்ளவையாகில் ராஜஸ குணங்கள் ஆகும். உதாரணமாக அதிக காரம், அதிக புளிப்பு முதலியவைகள் இவ்வகுப்பில் சேரும். ஊன உணவுகளோ தாமஸ உணவுகள்; இவைகள் கூடாது என்பர். ஊன உணவுகளிலும் பால்போன்ற சில பொருள்கள் சாத்துவிகத்திலும் முட்டை முதலியவைகள் தாமஸத்திலும் சேரும். இவைகள் கொல்லாமல் கிடைக்கின்றன. மரக்கறி வகையிலும், வெங்காயம் போன்றவைகள் தாமஸம் என்பர். இவ்விதமாக உணவுப் பொருள்களைப் பிரித்து சாத்துவிகமானவற்றை சேர்த்துக் கொண்டும், தாமஸமானவைகளை விலக்கிக் கொண்டும் இருந்தார்கள் பண்டைய இந்துக்கள். தமிழ் மரபிலும், சைவ, வைணவங்களில் இவ்வித வழக்கமே இருந்திருக்கின்றது.

இவ்வாறாக நமது நாட்டில் உணவுப் பழக்கங்கள் இருக்க, பிற நாடுகளில் இவைகள் எவ்வாறு இருக்கின்றன என்று ஒரு சிறிது பார்ப்போம். நமது தேசத்தில் உயர்ந்த வகுப்பார்களைத் தவிர ஏனைய மக்களும் வெளி நாடுகளில் எல்லா மக்களுமே இருவகை உணவுகளையும் உண்பவர்கள்தான். அவ்வுணவுகளின் பங்குவீதமும் இடம், பொருள், ஏவல், கொள்கை முதலியவைகளைப் பொறுத்து இருக்கிறது. சில நாட்டார்கள் ஊன் உணவை மிகுதியாகவும், சில நாட்டார், மர உணவை மிகுதியாகவும் உண்பார்கள். பனி நாடாகிய துருவங்களில் பயிர்கள் வளர்கிறதில்லை. மீன், சீல், திமிங்கிலம் முதலிய உயிர்களை வேட்டையாடிக் கொன்று பிழைக்கிறார்கள். சம சீதோஷ்ண நாடுகளில் இரு உணவுகளும் சமமாக இருக்கும். அவைகளிலும் இடத்துக்கு இடம் மாறுதலும் அடையும். வெப்ப நாடுகளிலோ ஊன் உணவைக் காட்டிலும், மர உணவே மிகுதியாகப் பயன் படுத்துவார்கள். ஏனெனில் பயிர்பச்சைகள் நன்றாய் வளருவதினால் தானிய உணவு ஏற்றமாக இருக்கும். சம

சீதோஷ்ண நாடுகளில் உணவுக்குரிய பிராணிகளை உணவுக்காக வளர்த்துவார்கள். இவ்வாறான பிரதேசங்கள் ஐரோப்பாவில் சில பகுதிகளும், ஆஸ்திரேலியாவும் ஆகும். ஆடு மாடுகள் வளர்ப்பதே செழித்த தொழிலாக அந்நாட்டார்கள் கொண்டிருக்கின்றார்கள். இந்த வகையில் ஆராய்ச்சி செய்தால் ஊன் உண்பவர்களே உலகில் மிகுதியாக இருப்பார்கள் என்று எண்ணவேண்டும்.

இனி சமயச் சார்பை எடுத்துக் கவனித்தால் பெரும்பான்மையான சமயிகள் இவ்விரு உணவுகளையும் உண்கிறார்கள் என்று அறியலாம். கிறிஸ்தவ முகம்மதிய யூதர் முதலியவர்களுடைய நூல்களில் ஊன் உணவு ஒப்புக்கொள்ளப்படுகின்றது. பௌத்தர்களும், கொலைபுரியாவிட்டாலும் ஊன் கொள்ளுகிறார்கள். இந்தியாவில் மட்டும் மரக்கறி மேன்மையாக கொள்ளப்படுகிறது. சமணர்கள், லிங்காயத்தர்கள், சைவ வைணவர்களில் உயர்ந்த வகுப்பார்கள் மட்டும் ஊனை வெறுத்து தானிய உணவே கொள்ளுகின்றார்கள். கொங்கணம், காஷ்மீரம், வங்காளம் முதலிய நாடுகளில் பிராமணர்களும் ஊன் உண்கிறார்கள். ஆகவே, சாத்துவீக உணவாகிய மரக்கறியை மட்டும் உண்ணுகிறவர்கள் வெகு குறைவான பேர் என்று எண்ணவேண்டும். சைவ உணவிற்காக நீண்ட காலம் பிரசாரம் நடந்தும் வன் அது சரியாக பரவவில்லையோ உரைக்கமுடியாது. அது சமயத்தின் தீவிர நம்பிக்கையைப் பொறுத்திருக்கின்றதல்லவா ?

இனி நமது தென்னாட்டை எடுத்துச் சோதித்துப் பார்க்கையில் என்ன நிலைமையைக் காண்கின்றோம் ? இந்துக்கள் எல்லாரும் சைவ வைணவத்தில் சேர்ந்தவர்களாயிருப்பார்கள். இவ்விரு சமயங்களிலும் அடியார்கள், ஆசாரியர்கள் எல்லாரும் ஊன் உணவை வெறுத்து, மரக்கறியையே உபயோகித்தார்கள். அப்படியிருந்தும் பெரும்பான்மையான பேர் இரண்டையுமே கொள்ளுகிறார்கள். இந்துக்களில் ஊன் பொல்லாதது என்ற நம்பிக்கை இன்றும் உண்டு. இதனை பழக்க வழக்கங்களில் காணலாம். திருவிழா, நோன்பு, விரதம், திருமணம், இறுதிநாட்சடங்கு, நன்னாட்கள் இவைகளில் ஊன் உணவை விலக்கி, மர உணவையே கொள்வார்கள். தகாததவை என்று எண்ணி அல்லவோ புனித நாட்களில் அவைகள் கொள்ளப்படுவதில்லை. ஆகவே, பொதுவாகத் தென் இந்திய மக்களுக்கு ஊன் உணவு பொல்லாததென்று கருத்து இருக்கின்றதல்லவா ?



சைவ வைணவ ஆலயங்களில் ஊன் உணவுத் தொடர்பு கூடவே கூடாது. சமய நூல்களிலும், சமயப் பழக்கங்களிலும், சடங்குகளிலும் அவைகள் அறவே தள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், நாட்டு மக்களிடையே கிராமதேவதை கோயில்களிலும், சிறுதேவதை கோயில்களிலும் அது தள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தேவதைகளின் திருவிழாக்களிலே உயிர்ப்பலி கொடுப்பதும் அத்தேவதைகளுக்கு ஊன் படைப்பு வைத்தலும் தொன்று தொட்டேயிருக்கின்றன. இவ்வித வழக்கங்களைப் பண்டைய மக்கள் வைத்து விட்டுச் சென்ற பழக்கவழக்கங்கள் என்பார்கள். இவைகள் சைவ, வைணவ மறுமலர்ச்சிக் காலத்திற்கு முந்தியிருந்தே வழக்கத்தில் வந்திருக்கின்றன என்று சொல்லவேண்டும். பிறகு சைவ, வைணவ, சமய ஈடுபாடு புகுத்தப்படவே பொதுமக்கள் இரண்டு வகைகளிலும் சிற்சிலவற்றை ஏற்றுக்கொண்டார்களென்று கூறலாமல்லவா ? புனித நாட்களாகிய நன்னாட்களில் சைவ உணவும், மற்ற நாட்களில் பழைய வழக்க உணவும் கொண்டார்கள் என்று கூறலாம்.

இவ்விதக் கலப்புக் கொள்கை சாதாரண மக்களிடத்திலிருக்க உயர்ந்த வகுப்பார்களிடை சைவ உணவே வேரூன்றி விட்டது இதனால் என்ன அறியக் கூடுமென்றால் சமய மறுமலர்ச்சிக் காலத்தில் சமய ஈடுபாடு பொது மக்களிடை நன்றாக ஊன்றவில்லையென்று கூறவேண்டும். இதுதக் காலத்திலும் சில குடும்பங்களில் சைவ உணவு இருப்பதும் மற்றக் குடும்பங்களில் இல்லாமலிருப்பதும், சில குடும்பங்களில் காலத்துக் கேற்றபடி மாறுவதும் காண்

கின்றோம். வேறு சமயங்கள் தங்கள் கொள்கைகளை வேரூன்றச் செய்வது போல் நமது வைதீகச் சமயங்கள் செய்யவில்லை. ஆகையால்தான் உணவு பொருத்தமட்டிலும் இப்படிப்பட்ட வேறுபாடுகள் தோன்றுகின்றன. கொள்கைகளை வற்புறுத்துவது மட்டுமன்றி உணவைப் பற்றியும் வற்புறுத்துவது சமயம் செய்யக் கூடிய சரியான முறை என்று கூறலாம்.

இனி உண்மையான நிலை அறிய வேண்டுமாயின் கணக்குப் புள்ளிகளைப் பார்த்தால் நன்றாகத் தெரியவரும். கோவைபோன்ற ஒரு நகரத்தை எடுத்துக் கொள்ளலாம். இதன் ஜனத்தொகை இரண்டு லட்சம். உணவு பங்கீடு கொடுத்த காலத்தில் ஓர் ஆள் ஒன்றுக்கு 6 அவுன்ஸ் தானியம் கொடுத்தார்கள். அது ஓர் ஆளுக்குப் போதாது. மேற்கொண்டு ½ அவுன்ஸ் உணவாவது வேண்டும். இது பெரும்பாலும் ஊன் உணவு வகையில் கூடியிருக்கலாம். நகர சபை கணக்குப்படி நாள் ஒன்றுக்கு எத்தனை ஊன் உணவு செலவாகிறதென்று அறியக் கூடும். இந்த இரண்டையும் ஒத்துப் பார்த்தால் விகிதாசாரம் நமக்குத் தெரிய வரும். சைவமக்கள் செய்யவேண்டிய கடமை என்னவெனில் கூடியவரையில் சைவ உணவை வற்புறுத்துதல் செய்யவேண்டியதே. இந்த இயக்கம் வளர்ச்சிபெறுவதாக.

---

# 2. நாவலர் நினைவுவிழாத் தலைமையுரை*

வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல்.

நாவலர் பெருமான் இவ்வுலகை விட்டு நீங்கி எழுபத்து மூன்று ஆண்டுகளாகின்றன. நாவலர் நினைவு விழாவையும் குருபூசையையும்பல இடங்களிலே பற்பல சங்கங்கள் கொண்டாடி வருகின்றன. வெறுங் கொண்டாட்டங்களோடு மாத்திரம் நாம் அமைந்து விடுதல் கூடாது. நாவலர் ஒரு பெருந்

*மத்தியமாகாணச் சைவமகாசபை கண்டிமா நகரிற் கொண்டாடிய நாவலர் நினைவு விழாவில் நிகழ்த்திய தலைமைப் பேருரை.



தொண்டர்; நம் சைவசமயத்திற்கு உய்வைத் தேடிய தொண்டர் ; தமிழ் மொழிக்குத் தலைமை தந்த தொண்டர் ; இறந்த காலத்தின் பழுதிலாத் திறத்தை நிலை நாட்டிய தொண்டர் ; வருங்காலத்தின் சிறப்புக்கு வழிகோலிய தொண்டர். இத்தகையவரை நாம் போற்ற வேண்டுமெனில், தொண்டு செய்தலையே நமது முதற்கடமையாகக் கொள்ளவேண்டும். அவர் செய்த தொண்டுகளை நாமும் செய்தல் வேண்டும். அவர் செய்ய விரும்பியவற்றையும் செய்யத் தொடங்கியவற்றையும் நாம் செய்து நிறைவேற்ற வேண்டும்.

## நாவலரின் பேராற்றல்

விநாடிக்கோரு பாட்டும், நாழிகைக்கோரு நூலும் ஆக்கத் தக்க பேராற்றல் உள்ளவராக இருந்தாலும் நாவலர் அவற்றை ஆக்குவதிலே தம் முயற்சியையும் நேரத்தையும் முழுதும் ஈடுபடுத்த விரும்பவில்லை. எழுத வாசிக்கப் பயிலாத மக்களுக்கு - கல்வி கற்க வாய்ப்பில்லாது அவலப்பட்ட மக்களுக்கு - நூல்களினால் என்ன பயன் உண்டாகும் ? நாவலர் காலத்திலே பொதுவாகத் தமிழ் நாட்டிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் ஒரு பெரிய சமய மாற்றம் நிகழ்ந்தது ; இம் மாற்றம் பல வழிகளில் நடந்தது. பாடசாலைகள் யாவும் சமய மாற்றஞ் செய்யும் இடங்களாக விளங்கின.

மேனாடுகளிலிருந்து கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்கு இங்கு வந்த பாதிரிமார் பாடசாலைகள் பலவற்றை நிறுவிக் கல்வி கற்பிக்கத் தொடங்கினார்கள். அப்பாடசாலைகளிலே தமது சமயத்தைத் தழுவியவர்களையே சேர்த்தார்கள். பிள்ளைகளைப் படிப்பிக்க விரும்பிய பெற்றோர் யாவரும் கிறித்தவ சமயத்தைச் சேரவேண்டியிருந்தது. அரசினர் பாடசாலைகளைத் தாமே நிறுவாமல் விட்டது மாத்திரமன்றிப் பாதிரிமார் நடத்திய பாடசாலைகளுக்குப் பொருளுதவியுஞ் செய்து கிறித்தவ சமயத்தைப் பரப்ப ஊக்கமளித்தார்கள். இதனாலே சைவசமயப் பிள்ளைகள் கல்வி கற்பதற்குச் சைவப் பாடசாலைகள் இல்லாமல் அவலப் பட்டனர். தம் நாட்டு மக்களின் அவலத்தைக் கண்டார் நாவலர். அவ

ருடைய உள்ளங் கொதித்தது; தமிழுஞ் சைவமும் சிறந்தோங்க வேண்டுமெனின் மக்கள் யாவரும் சைவப் பாடசாலைகளிலே கற்று அறிவு பெறவேண்டுமென உணர்ந்தார். கல்வி கற்பிக்கிறோம் என்று கூறிக்கொண்டு சமய மாற்ற வேலையிலே முனைந்து நின்ற பாதிரிமாரின் சூழ்ச்சியை அம்பலப் படுத்தினர். தமது சொற்பொழிவுகளினாலும் துண்டுப் பிரசுரங்களினாலும், தூங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பினர்; உணர்ச்சி உள்ளவர்களாக மானம் உடையவர்களாக வாழ வழி காட்டினர்; சைவசமயப் பிள்ளைகள் கல்வி கற்பதற்குப் பாடசாலைகளை நாடெங்கும் தொடங்கி நடத்த வேண்டுமென்று முடிவு செய்தார். அதனையே தமது வாழ்வின் முழு நோக்கமாகவும் கொண்டார். இதனைப் பின்வரும் அவருடைய மணிவாசகங்கள் புலப்படுத்துகின்றன.

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபோதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக் கருத்து, இது. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தி ஆவதற்குக் கருவிகள முக்கிய ஸ்தலங்கடோறும் வித்தியாசாலைகளை ஸ்தாபித்தலும் சைவப் பிரசாரஞ் செய்வித்தலுமே"

இக்கருத்தை நிறைவேற்றுவதற்காகவே நாவலர் அல்லும் பகலும் உழைத்தார்; தமது உடல் பொருள் உயிர் மூன்றினையும் நல்கினர். இதனை நிறைவேற்றுவதற்காக அவர் செய்த பணிகள் பலப்பல. அவர் அடைந்த இடையூறுகளும் பல நாட்டு நலனுக்காக அவர் பாடுபட்டாராதலின் தாம் செய்ய விரும்பியவற்றை எவர்க்கும் அஞ்சாது உண்மை வழியில் நின்று செய்தார். தம்மை எதிர்த்தவர்களை ஈற்றில் அடிபணியச் செய்தார்.

## நாவலர் செய்த பெருந் தொண்டுகள்

நாவலர் ஒரு பெரிய சீர்திருத்தச் செல்வர்; புரட்சி வீரர். கிறித்தவ பாதிரிமார் தம் சமயத்தைப் பரப்ப மேற்கொண்ட வழிவகைகளை எல்லாம் சைவசமயத்தை நிலை



நாட்ட அவர் கையாண்டார்; புதுப் புது வழிகளையும் மேற்கொண்டார்.

ஈழநாட்டிலே மாத்திரமன்றி இந்திய நாட்டிலும் சைவப் பாடசாலைகளைத் தொடக்கினர். பாடசாலைகளிலே படிக்கும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்க பாலபாடங்கள், இலக்கணச் சுருக்கம் முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். சைவசமய உண்மைகளைத் துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் பரப்பினர். அக்காலத்திலேயிருந்த தமிழறிஞர்களுக்குச் சொற்பொழி வாற்றும் பயிற்சி மிகக் குறைவாயிருந்தது. சொற்பொழிவாற்றப் பலரை நாவலர் பழக்கினர். தமிழ் நாடெங்கும் ஒப்புயர்வற்ற நாவன்மை உடையவராகத் தாமும் விளங்கினர். இந்நாவன்மை காரணமாக நாவலர் என்னும் பட்டத்தையும் பெற்றார். 'சபாப் பிரசங்க சிங்க'மென அறிஞர்கள் யாவரும் அவரை ஒருமுகமாகப் போற்றினர்.

செய்யுள் வடிவத்திலிருந்த சமய நூல்கள் பலவற்றை மக்கள் யாவரும், இலகுவிலே படித்துணருமாறு உரைநடையில் ஆக்கினர். வினாவிடைகள் மூலம் சமய உண்மைகளை மக்களுடைய மனத்திலே எளிதிற் பதியச் செய்தார். வடமொழியிலே உள்ள சமய நூல்களின் கருத்தையும் தமிழிலே எழுதிப் பரப்பினர். நூல்களைப் பதித்து வெளியிடுதற்கு அச்சியந்திர சாலையையும் நிறுவினர்.

## நாவலரின் கண்டனங்கள்

அவருடைய அஞ்சாமையையும், வீரத்தையும், ஆழ்ந்தகன்ற கல்வியறிவினையும், உண்மையை நிலை நாட்ட உயிரையே கொடுக்கும் பெருஞ் செயலையும் இன்றும் நமக்குக் காட்டுவன அவருடைய கண்டனங்களே. பொது நிலையங்களிலும், அறச்சாலைகளிலும் ஆலயங்களிலுமுள்ள குறைகளையும், கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தோர் செய்த சமய நிந்தனைகளையும், அறிஞர்கள் எனவும் தேசத் தொண்டர்கள் எனவும் நடித்தவர்கள் செய்த பிழைகளையும் அச்சம் சிறிதுமின்றியும், அவற்றை அம்பலப் படுத்திக் கண்டிப்பதாற் றமக்கு வரும் பகைமையையும் அதன் விளைவுகளையும்

பொருட் படுத்தாதும் கண்டித்தார். இதனாலே சிறித்தவர்கள் மாத்திரமன்றிப் பிராமணர்களும் கோவிலதிகாரிகளும் போலிச் சைவர்களும் பிறரும் இவருக்கு இன்னல் விளைக்க முற்பட்டனர்; வசைமாரியும் பொழிந்தனர். ஆனால் நாவலரோ "நம்மை நீங்கள் எப்படித் தூஷிக்கினும் உங்களுக்கு நன்மையாக முடிப்பவைகளை உங்களுக்கு வெளிப் படுத்துதற்கு நாஞ் சிறிதும் தடைப்படா வண்ணம் சிவ பெருமான் திருவருள் செய்க" என்று கூறினார். நீதிமன்றத்தில் வழக்குகளும் நடந்தன. எதற்கும் அஞ்சாத ஆண்மையுடனும் அசையாத ஊக்கத்துடனும் நாவலர் பொலிந்தார். நற்றொண்டாற்றினார்; நாடெங்கும் புகழ்பெற்றார்.

நாவலருக்கும் இராமலிங்க சுவாமிகளுக்கு மிடையில் நடந்த அருட்பா வழக்கினை அறியாதார் உளரோ? தேவார திருவாசகங்கள் முதலிய அருட்பாடல்களுடன் சேர்த்து அருட் பாடல் எனப் போற்றத்தக்க பெருமையும், அருட்டன்மையும் இராமலிங்க சுவாமிகளுடைய பாடல்களுக்கு உண்டா என்று நாவலர் கேட்டார், கண்டித்தார். இத்தகைய நாவலர் பெருமான் அவதரித்த நாட்டிலே இப்பொழுது தோன்றும் அருட்பாடல்களைப் பற்றி என்ன கூறலாம்?

## கன்னு பின்னுப் பாடல்கள் அருட்பாடல்களாகுமா?

மொழி மரபு அறியாது, பேசுவது போல எழுத வேண்டுமென்று வாதிடும் அறிவிலாச் சோம்பேறிகளுடன் பேசுவதுபோலப் பாடவும் வேண்டும் என்று 'கூத்தாடுங் கும்பலும்' இப்பொழுது தமிழ் நாட்டிலே தோன்றித் தமிழ்க் கொலை செய்கிறது. முறிந்த தடி, கிழிந்த சீலை, அறுந்த கயிறு......போன்ற பொருள்கள் பற்றியுங்கூடப் பல பாடல்கள் தோன்றுகின்றன. புற்றீசல்கள் போலத் தோன்றும் இப் பாடல்கள் உடனுக்குடனே அழிந்து வருவதை நாம் காண்கிறோம். ஆதலின், இவற்றைப் பற்றி அதிக கவலை அடைய வேண்டியதில்லை.

ஆனால், 'முருகன் அருளாலே இயற்றுகிறோம், ஆவேசத்தாலே பாடுகிறோம், சன்னதங்கொண்டு ஆக்குகிறோம் என்று கூறிக்கொண்டு 'கன்னா பின்னா' எனப் பாடித்



தமது பாடல்களையும் அருட்பாடல்கள் என்று பறையறைவோரை எப்படி நாம் பொறுக்கலாம்.

"காலைப் பிடித்தேன் கந்தா
கையை யெடுத்தேன் முருகையா
சிறியதுணம் இல்லாத குமரா
பெரிய செய்கை யுடைய முருகா"

என்று வாயிலே வந்தவற்றை யெல்லாம் பாடி இவையும் அருட் பாடல்கள் தான் என்றால் இது முருகன் திருவிளையாட்டா? அன்றேற் பக்திமயக்கமா? முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனைப் பாட யாவர்க்கும் உரிமையுண்டு. ஆனால் 'அவனருள் கூட்டப் பாடினேம், ஆதலினு என்று பிறரை ஏமாற்றுதல் லிவை அருட் பாடல்கள்' கூடாதன்றோ! நம் மொழியில் அளவில்லாத அருட் பாடல்கள் உள. அவற்றைப் படித்துப் பயனடைதலை விடுத்து இத்தகைய பாடல்களைக் கட்டி நமது மொழிக்கும் சமயத்துக்கும் அவமானத்தை உண்டாக்குதல் நன்றோ?

மொழிக்கு மொழி தித்திக்குதேவார திருவாசகங்களிலுள்ள அன்புப் பெருக்கும் அருள் நலமும் தெய்வ மணமும் புலமைத் திறனும் சிறிதேனும் இல்லாத இக் குப்பைக் கூளங்களையும் நம்மவர் சிலர் பொருட்படுத்திப் போற்றுகின்றார்களே. இஃது எவ்வளவு மடமை! இதனைக் கண்டால் யார்தான் நகைக்க மாட்டார்கள்; இவ்வாறு நெல்லுக்கும் புல்லுக்கும் வேறுபாடு தெரியாது ஒழுகும் நம்மவர்க்கு நாவலர் பெருமானைப் போற்றத் தானும் தகுதியுண்டோ என்று சிந்தித்துப் பாருங்கள்.

## உயிர்ப்பலி யிடுதலைவிட இழிவான செயல் வேறுண்டா?

இனி, நம் சமயத்துக்கும் நமக்கும் அவமானத்தையும் பழியையும் தரும் ஒரு கொடிய பழக்கத்தைப் பற்றியுஞ் சில கூற விரும்புகிறேன். அறியாமையாலும் அசுரத் தன்மையாலும் நமது கோயில்கள் சிலவற்றிலே இன்னும் உயிர்ப் பலியிட்டு வருகிறார்கள். இந்த அநியாயத்தை நீக்குதற்கு நாவலரும் முயன்றனர். அவருடைய முயற்சி இன்னும்

முற்றும் வெற்றி காணவில்லை. அவரைப் போற்றும் நாம் இந்த மா பாதகச் செயலைப் போக்கச் சிறிதேனும் முயற்சிக்கின்றோமா? தெய்வத்தின் பெயராற் கொலை செய்து கொண்டாட்டம் நடத்துவதைப் பார்க்கிலும் இழிவான செயல் வேறுண்டா? நமது கோவில்கள் சில கொலைக் கொட்டில்களாகவும், இறைச்சிக் கடைகளாகவும், குடியர்களின் வெறியாட்டிடங்களாகவும் காட்சியளிக்கின்றனவே. இதைப் பார்த்துக்கொண்டு கண்மூடி மௌனிகளாக நாம் இருத்தல் நன்றோ! இந்தக் கொடிய வழக்கத்தை நம் நாட்டிலிருந்து அறவே ஒழித்து விடுதல் நமது கடனென்று கூறவும் வேண்டுமா? அடுத்த ஆண்டில் நாவலர் திருநாளின்முன் இதனை ஒழித்துவிடத் திட்டமிட்டு நாம் முயல்வோமாக. உயிர்ப்பலியிடும் கோயில்களையுடைய ஊர்களில் வாழும் அன்பர்கள் பலர் இப்பேரவையில் இருக்கிறார்கள். தங்கள் தங்கள் ஊரிலே இக் கொடிய செயல் நிகழாமற் செய்யவேண்டியது தங்களுடைய கடமையென்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றே நினைக்கிறேன். நமது கோவில்களிலே திருவிழாக் காலங்களில் நடைபெறும் தாசிகளின் ஆடல் பாடல்களையும், வாண விளையாட்டுக்கள் முதலியவற்றையும் ஒழித்து விடவேண்டும் என்று நாவலர் கூறினார்; முயற்சியும் செய்தார். ஆனால் இப்பொழுது நடப்பதென்ன?, இவற்றை நீக்குதற்கும் நாம் முயல வேண்டும். நமது சைவ சமயச் சபைகளும் சங்கங்களும் ஆடம்பரத்திலும் ஆரவாரத்திலும் பதவி வேட்டையிலும் தமது பொழுதையும் பொருளையும் வீணாக்காது இவற்றையும் உயிர்ப்பலி யிடுதல் முதலிய கொடிய செயல்களையும் ஒழித்து விடுதற்கு வேண்டிய தொண்டுகளில் ஈடுபடும் நாள் எந்நாளோ?

## பிழைகள் மலிய எழுதுவதா நவயுகக் கலை?

அச்சிட்டு வெளியிடப்படும் நூல்களில் எவ்விதப் பிழையும் இருத்தல் கூடாது எனுங் கருத்து உடையவர் நாவலர் பெருமான். பிழைகளின்றி நூல்களை எழுதியும் பதித்தும் வெளிப்படுத்தினார். திருக்குறள், திருக்கோவையார் முதலிய நூல்களைப் பிழையின்றிப் பதிக்கத் தக்கவர் அக்காலத்தில்



அவரொருவரே என அறிஞர்களும் செல்வர்களும் கருதினார்கள்; அவரைக் கொண்டு அந்நூல்களையும் பிறவற்றையும் அச்சிடுவித்தார்கள்; பிறர் எழுதும் நூல்களிலுள்ள பிழைகளை எடுத்துக் காட்டிக் கண்டிப்பதற்கும் நாவலர் பின்னிற்பதில்லை. இதனால் அவருடைய காலத்திலே வெளியிடப்பட்ட நூல்கள் பிழைகளின்றிச் சிறந்த முறையில் அமைந்து விளங்கின. ஆனால் இப்பொழுது நடப்பதென்ன? பரிசு பெறும் நூல்கள் பலவற்றிற் பக்கத்துக்கொரு பிழையாதல் இருக்கும். ஒருமை - பன்மை, செய்வினை - செயப்பாட்டு வினை, புணர்ச்சி விதிகள் முதலியனவற்றைச் சிறிதும் அறியாதவர்களும் நூல்கள் எழுதுகிறார்கள், பரிசும் பெறுகிறார்கள், பட்டங்களையும் சூடுகிறார்கள்; சூட்டுகிறார்கள். பிழைகள் மலிய எழுதுவது ஒரு நவயுகக் கலையாக - புத்தம் புதிய கலையாக ஆகிவிடுமோ என்று கவலைப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சிறந்த தமிழ் நூல்களை நன்கு கற்றுத் தமிழ் மொழியறிவு நிரம்பப் பெறாமையால் பிழையின்றி எழுதும் ஆற்றல் கைவரப் பெறாத சோம்பேறிகள் பேசுவதுபோல் எழுத வேண்டும்; பாடவேண்டும் என்று கூறுகிறார்கள்; பிழை மலிய எழுதுகிறார்கள். இவர்களுடைய அறியாமை குறித்து இரங்குதலின்றி வேறென்ன செய்யலாம்?

பல நாடுகளிலிருந்து பலவழிகளிற் கிடைக்கும் செய்திகளை உடனுக்குடனே அச்சிட்டுப் பரப்ப வேண்டிய செய்தித் தாள்களின் இடைஞ்சல்களைக் கருதி அவற்றிலுள்ள பிழைகளையும் நாம் பொருட்படுத்தாமல் விடினும் விடலாம்.

மாண்டு மடிந்துபோன மணிப்பிரவாள நடையைப் படைத்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாய்த் தமிழ் மொழியிலே பற்றின்றித் தமிழின் தன்னிகரிலா மாண்பைச் சிதைக்கும் முயற்சியிலே வெளிப்படையாக ஈடுபட்டுள்ளவர்களையும், இதற்காகப் பாடுபடும் வெளியீடுகளையும் நாம் சிறிதும் மதிக்காமல் ஒதுக்கிவைத்து விடலாம்.

(தொடரும்)

உ
சிவமயம்

# அங்காளம்மன் பதிகம்

## வெண்பா அந்தாதி

### காப்பு

பெரியாண் டவனென்று பேருலகோர் செய்தற்
குரியாளங் காளம்மை யொண்சீர்—சரியாக
யான்கூறக் காப்பாமா லைங்கரத்தோன் பாதமெனுந்
தேன்கூரு மாமலர்கள் சேர்ந்து.

### நூல்

நான்மூலைக் கோட்டம் நடுவேபா தாளகங்கை
நான்மூ லையும்நான்கு வேதங்கள்—மேன்மையுடன்
அக்குழியே யாககுண்ட மங்களைஞ் சிந்துமம்மை
புக்குறைவா ளென்றறிந்து போற்று. (௧)

போற்றாய் நிருதிக் கணேசனை நீ மேல்புறத்தில்
வீற்றா யுயர்மா விருக்கக்கீழ்—வற்றமுட
னம்மை யிருப்ப ளருகேமும் மூர்த்திகடாஞ்
செம்மை யுடனிருப்பார் தேர். (௨)

தேறார் தாவூர்ந்து செவ்வேல்கொ டன்றடங்கச்
சூரார் தொலையத் தொலைத்தபிரான்—ஏராருந்
தேவி யிருவருடன் சேர்வார் வடமேற்கில்
ஆவியிவ ராமென் றறி. (௩)

அறிவாய் வடமேற்கே யைந்திருடி மார்கள்
செறிவா யுறைவார்தற் சேரும்—நெறிவடக்கே
யொன்பான்கோ டாம்வாழ்வா ருற்றபய பத்தியுடன்
அன்பாகச் சேவிப்பா யாய்ந்து. (௪)

ஆய்ந்த வடகிழக்கி னாங்குவடு கக்கடவுள்
சார்ந்தகிழக் கேமகவான் றானாகுந்—தோய்ந்தமதத்
தக்கன் றலைதடிந்த சாமியெங்கள் வீரனற்
றிக்கினாள னென்றே தெளி. (௫)



தெளியும் படியாகத் தெற்கி லெழுமாதர்
அளியுடனே வாழ்வா ரெல்லாமாக்—களியுடனே
மூப்ப னிருவர் மொழியுங்கா லத்துணையே
யொப்பாம் பலபொருளென் றுன்னு. (௬)

உன்னி மதுவாதி தள்ளியுய ரும்பொருளாந்
பன்னி நிவேதனங்கள் பண்ணிடுக—அன்னியமாய்
வாசற் படியிரண்டில் வாழ்வர் துவார பாலகர்கள்
பூசிப்பா யன்பாற் புகழ்ந்து. (௭)

புகழ்முறை யினோடுயரப் பூசை செயுங்காலத்
திகழ்வடுகன் றானொழிந்த தேவைத்—துகணீக்கிப்
பூசைமுடித் துக்கடையிற் பூசிக்க வன்னவனை
ஆசைமுடிப்பா னெம்மை யாண்டு. (௮)

ஆண்டுமற்றைத் தேவர்களை யட்டமையா லங்கதனை
ஈண்டுறைவோ ரீமயிஃதென் றுரைப்பர்—மாண்டோர்தம்
அங்க மணிந்தமையா லங்காள வம்மையென்பர்
இங்கிதுவே யுண்மையென வெண். (௯)

எண்ணிலிதை யாந்துணர்தோ ரெண்ணியவெண் ணங்களெல் [லாம்
எண்ணியவா றேபெறுவ ரென்றறிக—திண்ணமிது
வாகையாற் செய்மின் னறிவீரொன் றேதுமறை
சாகையாற் பல்காற் றக. (௧௦)

தக்கன்றன் யாகந் தனில்மற்றோ ராண்டவனை
மிக்ககருத் தால்விதிப்பான் வேண்டினா—னக்கணத்தில்
அன்ன தொழித்தே யதிற்பெரிய ஆண்டவனாய்
முன்னவளே தோன்றினான் முன். (௧௧)

முன்னமிந்தப் பூசை முடித்தெண்ண முற்றியுளோ
ரென்னளவாற் கூற விசையுமோ ?—அன்னவர்கள்
மேய புகழை விரித்துரைக்கப் பாதாள
நாயகற்கும் போதாதே நா. (௧௨)

திருச்சிற்றம்பலம்

23–8–1873

வித்துவான் கந்தசாமி முதலியார்
கோயமுத்தூர்

1 1 1 1
நிருதிப்பாற் கணேசன் அரன்பிர்மா விமலே

1 1 3
நெடியோன் ருத்திரன் சுப்பிர மண்யன்

7 1
கார்வடக்கு ரிஷிகளோடு குபேரன் கங்கை


1 1
எருதேறும் ஈசானன் வைரவன் ஆட்கொண்டான்

1
உய்யக் கொண்ட இந்திரன் வன்னி

1 5
பரபத்திர காளி பஞ்சகன்னி பரைநடுவிற்

4
குழிமூலே வேதம் நாலே.

(இஃதோர் பழய பாட்டு)




1
1
1
1
1
1
3
7
1
1
1
1
1
5
4

# மதிப்புரை

1. **திருக்கேதார யாத்திரை :** ஆசிரியர் V. கலியாண சுந்தரம், கேதார நிலையப் பதிப்பகம், கேதாரகட்டம், காசி. விலை 1—4—0.

இந்நூல் முதலில் கட்டுரைகள் வாயிலாகக் குமாரகுருபரன் பத்திரிகையில் வெளிவந்தது. அக்கட்டுரைகளை வாசித்தபோதே எனது நெஞ்சை அவைகள் உருக்கின. குமாரகுருபரன் சஞ்சிகை வந்தவுடனே நான் முதலில் வாசிப்பது கேதாரயாத்திரைக் கட்டுரைதான். அப்போதே அக்கட்டுரைகள் முழுவதும் ஒரு நூலாக வந்தால் நன்றாக இருக்குமென்று எண்ணினேன். அப்படியே நூலும் வந்துவிட்டது. பதிப்பும் அழகான பதிப்பு. பொருளும் நெஞ்சை ஊக்குவது ஆகும். படிக்கப் படிக்கப் பாராத இடங்களுக்கு நம்மை அது இழுத்துச் செல்கின்றது. ஆசிரியர் போன காலத்தில் அவர்கள் நெஞ்சில் உதித்த சிந்தனைகளை நன்கு சித்திரித்திருக்கிறார். இராமபுரியில் அவருக்கு வந்த இடையூறு நமக்கு வந்தாற்போல் தோன்றுகிறது. கண்டிக்காரன் சொன்ன கதை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இவ்வாறு 11 பகுதிகளைக் கொண்டது இந்நூல். நூல் சிறிதானாலும் பெரிய குறிக்கோளைக் கொண்டது. அழகிய காட்சிப் படங்களும் ஒரு நவயாத்திரைப் படமும் அதிலிருக்கின்றது. 12 ஜோதிலிங்கங்களில் ஒன்றாகிய கேதாரத்தைத் தரிசிக்க விரும்புகிறவர்கள் இந்நூலைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

2. **திருத்தவத்துறைக் கோயில் வரலாறு** (லால்குடி) : தேவஸ்தான வெளியீடு. விலை அணா 3.

இரண்டு காட்சிப்படங்களும், ஒரு ஸ்தலப்படமும் கொண்டது. ஆசிரியர் வித்வான் - ஆர். பஞ்சநதம் பிள்ளை அவர்கள். இவ்வாசிரியர் வெளியிட்ட பல தலவரலாறுகளில் இது ஒன்று. எளிய நடையில் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் முறையில் இயற்றப்பட்ட நூல். தலம், கோயில், மூர்த்தி, தீர்த்தம், சிற்பம், திருவிழா, பொருள், நிர்வாகம், புராணம், கல்வெட்டு, பாடல்கள் முதலான விவரங்கள் எல்லாம் இந்நூலில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இவைகளில் கல்வெட்டுச் சிறப்புகள் மிகச் சிறந்தது.

**3. ஸ்ரீ தியாகராஜ லீலை - முதற்பகுதி - தேவ லீலை 50 :** வெளியிட்டவர் திருச்சி மாவட்டம், பிக்ஷாண்டார் கோயில் பண்ணையாளர் G. இராஜகோபால் பிள்ளை அவர்கள். விலை ரூ. 2—0—0.

இது ஓர் உரைநடை நூல். செய்யுள் நூலை முந்தியே Dr. சுவாமிநாத அய்யர் அவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். சுவாமி, அம்மன் படங்கள் கண் கவரத்தக்க வண்ணங்களில் வரையப் பெற்றிருக்கின்றன. ஸ்ரீ கமலாம்பாள் கீர்த்தனம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றது. இடையிடையே சில பாசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. திருவாரூர் பூங்கோயிலைப் பற்றிய புராண வரலாறுகளை இந்நூல் எடுத்துரைக்கின்றது. யாத்திரிகளுக்கு இது நல்ல பயன் தரும்.

**4. முருகன் புகழுரைகள் ஆயிரம் :** தொகுத்தவர் திருவாளர் முருக யோகலிங்க நம்பிகள் கிடைக்குமிடம். இரத்தினமங்கலம்-முருக விசாகநம்பி, "காமாட்சியருள்", 21, திருமலைப்பிள்ளைத்தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

முருகப் பெருமானைத் தமிழ் மொழியில் அருச்சனை செய்ய ஆர்வமுள்ளவர்களுக்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கும். அகராதி வரிசையில் தொகுத்திருப்பதனால் வெகு எளிதில் பாடம் செய்யமுடியும். பண்டைப் புலவர்கள் ஆண்டிருக்கும் சொற்றொடர்களைக் கொண்டது. மேலும் நூறு நாமங்களை உரைப்பதற்கு ஏற்றதாக தடித்த எழுத்தில் அச்சடித்திருப்பதும் போற்றத் தக்கது. வழிபாட்டிற்கு உகந்த அளவு கொண்ட நூல்.

**5. பண்டார மும்மணிக்கோவை :** குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்தது. தருமபுர வெளியீடு.

சட்ட நாதத் தம்பிரான் எழுதிய குறிப்புரையுடன் வெளியிடப்பட்டது. முத்து சு. மாணிக்கவாசகனார் எழுதிய அருமையான நூன்முகம் கொண்டது. சைவமக்களுக்கும் சிறப்பாக மாணவர்களுக்கும் மிகுந்த பயன் தரக்கூடியது.

**6. பன்னிரு திருமுறைத்திரட்டு :** ஈசான சிவகணம் முத்துசாமி செட்டியார் 60வது ஆண்டு நிறைவு விழாமலர். திருமுறைகளிலிருந்து 27 பாசுரங்களைத் தொகுத்து வெளியிடப்பட்டது. பல பெரியார்களின் ஆசி உரையோடு கூடியது.



**7. சிதம்பர விலாசம்:** மார்கழித்திருவாதிரையின்போது காசிமடத்தார் வெளியிட்டது. குறிப்புரையுடன் கூடியது. இலவசவெளியீடு. சிதம்பரப்பெருமையைநன்குவிளக்குவது.

**8. மதம் வேண்டுமா ?** ஆசிரியர் ஆ. முத்துசிவன், அருள் நெறித்திருக்கூட்டம், குன்றக்குடி. விலை அணா 2. தற்காலத்தில் பல இளைஞர்கள் எழுப்பும் கேள்விகளுக்குத் தக்க விடை இதில் காணலாம். தமிழ்ப் புலவர்கள் இயற்றிய பொன்னுரைகளையன்றி ஆங்கில அறிஞர்கள் கூறிய மேற்கோள்களையும் எடுத்துக் கொண்டு விளக்குவது. இளைஞர்கள் இதனைப் படிப்பார்களாக.

---

## அன்பர்கள் மறைவு

**1. திரு. L. N. பரமசிவப் பிள்ளை அவர்கள் :** லால்குடியில் 10—1—53ல் சிவபதம் அடைந்ததைக் கேட்டு வருந்துகின்றோம். அவர்கள் நெடுநாளாக லால்குடி அறநிலையக் கமிட்டியில் தலைமை வகித்துச் சைவத்திற்காகப் பாடுபட்டவர்கள். திருத்தவத்துறை ஆலயத்தில் சிறந்த பணியாற்றியவர். காலம் ஆகும்வரைக்கும் கூட்டுறவு முதலிய பொதுச் சேவைகளில் ஈடுபட்டு இருந்தவர்கள்.

**2. V. I. முனிசாமி பிள்ளையவர்கள் :** 28—1—53ல் சிவபதம் அடைந்ததைக் குறித்து வருந்துகின்றோம். நீலகிரியில் தேசியத் தலைவராய்ப் பல ஆண்டுகள் சேவை செய்தவர்கள். சில நாள் அமைச்சராகவும் இருந்தார்கள். ஒத்தைக்கு அடுத்த காந்தலில் திரு. ஓம்பிரகாச சுவாமிகள் மடத்தில் பரிபாலன அங்கத்தினராயிருந்து ஆண்டுதோறும் திருவிழாக்களில் சமயச்சபை கூட்டி நடத்துவதில் இணையற்ற அன்பு கொண்டவர்கள். நீலகிரி அறநிலையங்களில் அறக்காப்பாளராகவும், ஆலோசகராகவும் இருந்து சமயச் சேவை செய்தவர்கள்.

இவ்விரண்டு பெரியார்களின் ஆன்மாக்கள் இறைவன் திருவடியில் சாந்தி பெறுவதாக.

## செய்தித் திரட்டு

31—12—52 ஸ்ரீசாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோவை ஜில்லா : இக் கல்லூரிக் கழகம் கோவை அரசியல் பதிவுச் சாலையில் பதிவு செய்யப்பட்டது. யாதாஸ்தும், விதிகளும் உறுதிப் படுத்தப்பட்டன. அடியிற் கண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தலைவர் : Dr. R. K. சண்முகம் செட்டியார்.

துணைத்தலைவர்கள் : திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் ; திரு. V. C. சுப்பைய கவுண்டர்.

செயலாளர் : திரு. ம. இராமச்சந்திரன் செட்டியார்.

துணைச் செயலாளர் : திரு. C. இராமசாமி அடிகள்.

அங்கத்தினர்கள் : உயர் திரு. ஆறுமுக சுவாமிகள் முதலிய எழுவர். 17—1—53ல் சென்னைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர் Dr. இலட்சுமண சுவாமி முதலியார் அவர்கள், சாந்தலிங்க சுவாமிகள் மடத்தையும் கல்லூரி வைக்கப் பெறும் இடத்தையும், பார்வையிட்டுத் திருப்தி தெரிவித்தார்கள். பிறகு 26—1—53ல் அறநிலை அமைச்சர் திருவாளர் K. வெங்கடசாமி நாயுடு அவர்கள் திருப்பேரூருக்கு விஜயம் செய்து ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் மடத்தையும் கல்லூரி வைக்கும் இடத்தையும் கண்டு மகிழ்ச்சி தெரிவித்தார்கள். கல்லூரி ஏற்படப் போவதைக்குறித்துக் கொங்குநாட்டு இளைஞர்களும் அக்கம் பக்கத்து மாணவர்களும் பெரும் மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள். பலபேர் கல்லூரியில் சேர்ந்து செந்தமிழ் கற்க ஆவல் கொண்டிருக்கிறார்கள். கொங்குநாட்டுச் செல்வர்கள் பலரும் கல்லூரியை ஆதரிக்க முன் வந்திருக்கிறார்கள். பொருள் படைத்தவர்கள் கல்லூரிக்குப் பொருளையோ, நிலத்தையோ உதவி செய்ய முன்வந்து தமிழ்த் தாய்க்கு நன்றி செலுத்துவார்களாக.

14—1—53 பொங்கல் திருநாள் : கோவை கூட்டுறவுப் புறநகரில் பிள்ளையார் வழிபாட்டோடு தொடங்கப்பட்டது. கோவைத் தமிழ்ச் சங்கத்தில் பொங்கலைக் குறித்துப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. இரண்டிலும் ஆசிரியர் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

18681

பகுதி நடந்தது. திருவள்ளுவர் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பிறகு கொடியேற்றமும் இரண்டு அரிய பேச்சுக்களும் நிகழ்ந்தன. ஆசிரியர் உரையோடு முதற்பகுதி முடிந்தது. இசை பிற்பகலிலும், நாடகம் இரவிலும் நடந்தன.

திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை, கண்ணப்பர் திருநாள் : 26—1—53 திருவரங்கம், புலவர் திரு. கே. சேதுமாணிக்கம் அவர்கள் 'அன்பின் எல்லை' என்னும் பொருள்பற்றி அரிய விரிவுரை ஆற்றினார்கள்.

1-2-53 அருட்டிரு ஞானியார் அடிகள் திருநாள் : மதுரை பேராசிரியர் திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் புலவர் அ. நடேச முதலியார் அவர்கள் 'திருவருள்' அனுபவம் என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

தாயுமானவர் திருப்பாடல் விளக்கவுரை இரண்டாம் ஆண்டு நிறைவு விழா : 8—2—53 நகராட்சி ஆணையாளர் திரு. இராமலிங்க முதலியார், M. A. அவர்கள் தலைமையில் புலவர் திரு. அ. நடேச முதலியார் "தாயுமானவர்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

4—1—53. கோவை தமிழ்ச் சங்கம் : சிவக்கவிமணி C. K. S. முதலியார் தலைமையில் ஈசான சிவகணம் திரு. C. P. முத்துசாமி செட்டியார் "திருவெம்பாவை" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

18—1—53. துடிசைகிழார் திரு. அ. சிதம்பரனார் தலைமையில் யூனியன் உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர் துரைசாமி நாயுடு "சிலப்பதிகாரம் நீதி நூல் அல்ல" என்று பேச, தலைவர் முதல் ஏனையோரும் மறுத்துப் பேசினார்கள்.

25—1—53 திரு. S. R. வெங்கிடகிருஷ்ண முதலியார் தலைமையில் தமிழ்ப் புலவர் திரு. D. N. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் "வேதநாயகம் பிள்ளை அவர்கள் நூல்" கவித்திறன்களைப் பற்றி விரிவாகப் பேசினார்கள்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street (Zones Road), Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 61.